# புதியவன்
PUTHEYAVAN

ஊருக்கு நல்லது சொல்வேன்–உண்மை அறிந்து சொல்வேன்

நித்திலம் பதிப்பகம்
#87 பிரதான வீதி, சின்னக்கடை
மன்னார்.
*டிஜிட்டல் பிறின்றிங் (Banner & Sticker)
*Offset Printing (4 colours)
*இறப்பர் முத்திரை (Ruber stamp)
* Screen printing
*Mug printing
*Wedding Cardes
*Dero printing
*சகலவிதமான பதிப்பக வேலைகளுக்கும்.
தொலைபேசி:- 023-2223545,
மின்னஞ்சல் :- nithithilam31@gmail.com

◆பாதை 01 ◆பயணம் 105 ◆திருவள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 23 வெள்ளி, 06/06/2014 ( TP- 0233238444 ) www.putheyavan.com

## இன்னும் 132 பேருக்கு மட்டுமே புனர்வாழ்வு மீதி எங்கே?



(கொழும்பு)
132 முன்னாள் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களே தற்போது புனர்வாழ்வளிக்கப்பட வேண்டியுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.
2009ம் ஆண்டு யுத்தம் முடிவுற்ற போது, 12000 முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் சரணடைந்தும், (09ம்பக்கம்பார்க்க)

## தமிழீழத்தை உருவாக்க பொருத்தமான இடம் தமிழ்நாடு

(கொழும்பு)
இலங்கையில் தமிழீழத்தை உருவாக்க பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் என ஜெயலலிதா விடுத்துள்ள கோரிக்கையை வன்மையாக கண்டிப்பதாக தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை அண்மையில் சந்தித்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இலங்கையில் தமிழீழத்தை உருவாக்க பொது வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் (09ம்பக்கம்பார்க்க)

## அரசியலைத் தீர்மானிக்கும் யோதிடர்கள்

(கொழும்பு)
ஜோதிடர்களின் ஆலோசனைக்கு அமைய தேர்தலுக்கான திகதியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக் நிர்ணயிப்பார் என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 2015ம் ஆண்டு (09ம்பக்கம்பார்க்க)

# உறவுகளுக்கான போராட்டத்தில் காடையர்கள் சூழ்ந்தனர்

## பா.உறுப்பினரை தாக்கிய பொலிசார் இதுதான் இலங்கையின் சனநாயகம்




(முல்லைத்தீவு)
புலனாய்வாளர்கள் பொலிஸாரின் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் காணாமல்போரின் உறவுகள் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு முன்பாகத் திரண்டு தமது உறவுகளை மீட்டுத் தருமாறு கண்ணீர் மல்கக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காணாமல் போன உறவினர்களினால் நேற்று வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் எதிரில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போதே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், (09ம்பக்கம்பார்க்க)





## நாட்டுப்பற்றை மறந்துவிடாத புலம்பெயர்ந்தவர்கள்

### வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஷ்வரன்

(யாழ்ப்பாணம்)
நாட்டில் இயல்பு நிலை தோற்றுவிக்கப்பட்டிருக்கும் நிலையில் புலம்பெயர்ந்த தமிழர்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய சிலர் இன்று இங்கே வந்து பாதிக்கப்பட்ட தங்கள் உறவுகளுக்காக உதவியாற்றுவது அவர்களின் தாய்நாட்டுப் பற்றை எடுத்துக் காட்டுவதாக வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
தமிழர்கள் தாம் பிறந்த மண்ணில் நிம்மதியாக வாழ அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து (09ம்பக்கம்பார்க்க)

## வடக்கில் தற்போது 15,000 படையினராம் கணக்குகாட்டுகிறது ராணுவம் ?

(கொழும்பு)
வட மாகாணத்தில் இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்டிருந்த சுமார் 18 ஆயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப் பட்டுள்ளதுடன் வட பகுதியில் தற்போது 15 ஆயிரம் இராணுவத்தினரே நிலை (09ம்பக்கம்பார்க்க)

## குடும்ப ஆட்சியின் பிடியில் இலங்கை பாவம் குடிமக்கள்



(கொழும்பு)
மகிந்த ராஜபக்சவின் மரணத்துக்கு பின்னர் அல்லது ஜனாதிபதி பதவியில் நீடிக்க உடல் நிலை ஒத்துழைக்காத பட்சத்தில் அவரது குடும்ப உறுப்பினர் ஒருவரே ஜனாதிபதியாக நியமிக்கப்படுவதற்கான சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இதன் ஆரம்ப கட்டமாக அவரது சகோதரர் கோத்தபாய ராஜபக்சவை பிரதமராக நியமிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையின் அரசியல் அமைப்பின்படி, ஜனாதிபதி (09ம்பக்கம்பார்க்க)

## இலங்கையில் இனப்படுகொலையா ? ஜெயலலிதாவை எச்சரிக்கும் கெஹலிய

(கெழும்பு)
இலங்கையில் இனப்படுகொலை மேற்கொள்ளப்பட்டதாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கூறியிருப்பதை இலங்கை அரசாங்கம் கண்டித்துள்ளது.
இந்தநிலையில் இது தொடர்பில் இலங்கை இந்திய மத்திய அரசாங்கத்திடம் உத்தியோகபூர்வ ஆட்சேபனையை வெளியிடவுள்ளதாக இலங்கையின் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டு அரசியல்வாதி ஒருவரால் சுமத்தப்பட்டுள்ள பாரிய குற்றச்சாட்டாகும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்த ஜெயலலிதா இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதாக குறிப்பிட்டிருந்தார்.
இதனை கண்டித்துள்ள கேஹலிய ரம்புக்வெல்ல
.. (09ம்பக்கம்பார்க்க)

24X7 மணிநேர முதன்மை செய்திகளுடன்..
www.putheyavan.com http://www.
அரசியல்,சினிமா,அழகு,திரைவிமர்சனம்,விநோதம் போன்ற சுவையான அம்சங்களுடன்.
உள்ளதை உள்ளபடி....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகள் ஒருபோதும் உறங்குவதில்லை........

## அமைச்சர் ரிசாட்டின் அலுவலகத்தை பொதுபல சேனா முற்றுகையிட்டபோது கமெராக்கள் செயலிழந்து விட்டன?



அமைச்சர் ரிசாத் பதியூதீனின் அலுவலகத்தை பொதுபல சேனா இயக்கம் முற்றுகையிட்டபோது, அங்கு பெருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி கமெராக்கள் செயலிழந்து விட்டதாக நேற்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுபல சேனா இயக்கம், வட்டரக்க விஜித்த தேரரை அமைச்சர் ரிசாத் மறைத்து வைத்திருப்பதாகத் தெரிவித்து கடந்த ஏப்ரல் மாதம் 23ம் திகதி காலையில் அமைச்சின் அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் கொள்ளுப்பிட்டி பொலிஸாரிடம், சம்பவம் தொடர்பான காணொளிகள் அடங்கிய சி.டிக்களை வழங்குமாறு தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு நீதவான் திலின கமகே உத்தரவிட்டிருந்தார்.

3 தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், கொழும்பு 3ல் அமைந்துள்ள அமைச்சுக் காரியாலயத்தின் மீது பொதுபல சேனா அமைப்பின் பிக்குகள் அத்து மீறி பிரவேசித்த போது, கமெராக்கள் தொழிற்படவில்லை என நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, நேரில் கண்ட சாட்சிகள் மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களின் வீடியோ காட்சிகளின் அடிப்படையில் விசாரணைகளை நடாத்துமாறு நீதிமன்றம் காவல்துறையினருக்கு உத்தரவிட்டுள்ளது.

பொதுபல செனா அமைப்பின் பிக்குகள் அனுமதியின்றி அமைச்சுக்குள் புகுந்து அமைச்சின் அறைகளில் வட்டரட்ட தேரர் இருக்கின்றாரா என தேடியதாக அமைச்சின் மேலதிக செயலாளர் பொலிஸில் செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வவுனியா உலுக்குளத்தில் சுருக்கிட்டு ஒருவர் தற்கொலை

நேற்று வவுனியா உலுக்குளத்தில் நான்கு பிள்ளைகளின் தாயாரான நிசாந்சலா பிரியந்தி சிறிசேனா வயது 30 என்பவர் சுருக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்

இவர் தற்கொலை செய்ததற்கான காரணங்கள் அறியப்படாத போதும் இவர் சித்த சுவாதினம் உள்ளவர் என உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்கொலை செய்துகொண்டவரின் கணவர் ஒரு இராணுவ வீரர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வவுனியா மூன்றுமுறிப்புப் பகுதியில் வாகன விபத்து ஒருவர் படுகாயம்

வவுனியா மூன்றுமுறிப்புப் பகுதியில் நேற்று காலை(05.06.2014) 10.30 மணியளவில் பேருந்தும் கப்ரக வாகனமும் மோதிக் கொண்டதில் இரு வாகனங்களும் சேதமடைந்துள்ளதுடன் கப்ரக வாகனத்தில் பயணித்த பெண்ணொருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக தெரிய வருவது மூன்றுமுறிப்புப் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக வவுனியா நகரை நோக்கி வந்த கப்ரக வாகனமும் வவுனியா நகரிலிருந்து ஈரப்பெரியகுளம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பேரூந்தும் ஒன்றையொன்று விலத்தும் சந்தர்ப்பத்தில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

தளபாட வாணிபத்திற்காக சென்ற கப்ரக வாகனத்தில் பயணித்தப்பெண் பலத்த காயங்களுக்கு உள்ளாகி வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவத்தில் காயமடைந்தவர் பூந்தோட்டத்தைச் சேர்ந்த திருமதி கௌசலா அழகராசா வயது35 எனத் தெரியவருகிறது. இவருக்கு கழுத்து மற்றும் வயிற்றுப் பகுதியில் காயம்பட்டுள்ளதால் தொடர்ந்தும் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்று வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

## இலங்கை இடம்பெயர் மக்களுக்கு இந்தியா கூடுதல் உதவி வழங்க வேண்டும் - யாழ் பேராயர்

இலங்கை இடம்பெயர் மக்களுக்கு இந்தியா கூடுதல் உதவிகளை வழங்க வேண்டுமென யாழ்ப்பாண பேராயர் டெனியல் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு சென்னைக்கு விஜயம் செய்துள்ள வணக்கத்திற்குரிய பேராயர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், இதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பு அவசியமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் ஒத்துழைப்பு இன்றி மீள்குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்கள் பாரியளவில் துன்பங்களை எதிர்நோக்கி உள்ளதாகவும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளின் போது மிகவும் அவதானம் அவசியமாகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய உதவி ரயில் திட்டம் வரவேற்கப்பட வேண்டியது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து மக்களின் நன்மைக்காகவும் கத்தோலிக்க தேவாலயம் கடமையாற்றி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

## இரத்ததானம் செய்வோர் தன்னலம் தேடாத மனிதர்கள்

உலக இரத்ததானம் வழங்குவோரை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று (05.06.2014) வவுனியா சுகாதார திணைக்கள தாதியர் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வையொட்டி வாகன பவனி வவுனியா பொது வைத்தியசாலையில் இருந்து ஆரம்பித்து தாதியர் கல்லூரி வரை சென்றது.

Inline image 1 இதில் கௌரவ விருந்தினர்களாக வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன், வட மாகாணசபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன், வட மாகாணசபை உறுப்பினர்தியாகராஜா மற்றும் பலர் கலந்து கொண்டனர். தொடர்ந்து இவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

பின்னர் இடம்பெற்ற கலைநிகழ்வை தொடர்ந்து உரையாற்றிய வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன் அவர்கள் இரத்த தானம் செய்தோரை பாராட்டியதுடன் இவர்களே இந் நிகழ்ச்சியின் கதாநாயகர்களாக விளங்குகின்றார்கள் என்றார்.

மேலும் அவர் கூறுகையில் பல உயிர்களை காப்பாற்றுபவர்களில் இவர்களின் பங்கும் மறை முகமாக உள்ளது. அத்தோடு இவர்களின் இந்த உயர்ந்த உள்ளத்தால் தன்னிலை பெற்று விளங்குகிறார்கள். உலகத்தில் உள்ள மக்கள் அனைவரும் எத்தனையோ இனத்தால் பிரிந்திருந்தாலும் இரத்தத்தால் ஒன்றிணைந்தவர்களாக காணப் படுகின்றார்கள் என உரையாற்றினார்.

இவரை தொடர்ந்து உரையாற்றிய வைத்திய கலாநிதி சி.சிவமோகன் அவர்கள் இரத்ததானம் எவ்வாறு உருவாகியது என விளக்கமளித்தார். அவர் இதை பற்றி கூறுகையில் 1628ம் ஆண்டு வில்லியம் ஹார்வே என்பவரால் மனிதனின் இரத்தச் சுற்றோட்ட தொகுதி கண்டு பிடிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து இரத்தம் மாற்றீடு செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது முதன் முதலில் 1665ல் வைத்தியர் ஜான் சுவாம்மிரடாம் என்பவரால் ஒரு நாயில் இருந்து இன்னொரு நாய்க்கு இரத்தம் ஏற்றப்பட்டது.

1818ல் தான் முதலில் மனிதனின் உடம்பிலிருந்து இன்னொரு மனிதனின் உடம்பிற்கு இரத்தம் ஏற்றப்பட்டது. பின் 1901ல் இரத்தத்தில் 3 வகைகள் உள்ளது என்பது கண்டுபிடிக் கப்பட்டதுடன், 1940ல் இரத்தத்தில் சுர் வகைகள் கண்டுபிடிக்கப்பட்டன இத்தோடு இரத்ததானத்தின் முக்கியத்துவம் பற்றியும் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டார்: இரத்ததானம் செய்வோருக்கு சமூதாயத்தில் ஒரு முக்கிய இடம் இருக்கும் ஏனெனில் இவர்கள் தன்னலம் தேடாத மனிதர்கள். பொது நலத்தில் அக்கறை கொண்டவர்கள் எனவும் அவர் கூறினார்.

நிறைவாக இரத்ததான வழங் குனர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



## எழிலன் உள்ளிட்ட 5பேர் காணாமற்போனோர் தொடர்பான வழக்கு ஒத்திவைப்பு

2009ஆம் ஆண்டு இராணுவத் தினரிடம் சரணடைந்து காணாமற் போனோரான விடுதலைப் புலிகளின் திருகோ ணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் உள்ளிட்ட ஐந்து பேர் தொடர்பான வழக்கு ஒத்திவைக்கப்பட்டு உள்ளது.

குறித்த வழக்கு நேற்று முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ம.ஆனந்தராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்ட போதே ஜுலை மாதம் 21ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாக அறிவித்தார்.

இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற்போனோர் தொடர்பாக அவர்களின் குடும்ப உறுப்பினர் களான கிரு'ணகுமார் ஜெயகுமாரி, விஸ்வநாதன் பாலநந்தினி, கந்தசாமி காந்தி, அனந்தி சசிதரன், கந்தசாமி பொன்னம்மா ஆகியோ ரினால் 2009ஆம் ஆண்டில் வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வவுனியா மேல் நீதிமன்றத்தில் இருந்த குறித்த வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் முல்லைத்தீவு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. இந்த வழக்கு நேற்று (05.06.14) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சட்டமா அதிபர் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட அரச சட்டத்தரணி, மன்றிற்கு சமூகமளிக்கவில்லை. இதனால் குறித்த வழக்கினை ஜுலை 21 ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

இது தொடர்பாக வடமாகாண சபைஉறுப்பினர் அனந்தி சசிதரன் கருத்துத் தெரிவிக்கையில், சட்டமா அதிபர் திணைக்களத்தினால் முன்னர் நியமிக்கப்பட்ட அரச சட்டத்தரணி ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரியாகச் சென்றமையினால் குறித்த வழக்கு இழுபறி நிலையில் இருந்து வந்தது.

தொடர்ந்து பிறிதொரு அரச சட்டத்தரணி ஒருவர் நியமிக்கப்பட்டு அவர் மூலம் கடந்த ஏப்ரல் 2ஆம் திகதி வழக்கு இடம்பெற்றது.

இருந்தும் நேற்று (05.06.14) வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்ட போது வருகை தரவில்லை. இதனால் இந்த வழக்கு இழுபறி நிலையில் இருந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

ஏறத்தாள 5 வருடங்களாக அரசாங்கமும் இலங்கையின் நீதித்துறையும் இந்த வழக்கினை காலம் தாழ்த்திச் செல்கின்றன. இது மட்டும் அல்லாமல் ஆளும் தரப்பிற்கு அல்லது படையினருக்கு எதிரான வழக்குகள் அனைத்துமே இலங்கையின் நீதிமன்றங்களில் நிலுவையில் கிடப்பில் போடப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியவன்
புதியவன் PUTHEYAVAN
ஊருக்கு நல்லது சொல்வேன்-உண்மை அறிந்து சொல்வேன்

இல:-87 பிரதான வீதி, மன்னார்.
தொலைபேசி இல. 0233238444
Email:putheyavannews@gmail.com

## வழிப் போக்கர்களிடத்தில் சிக்கியுள்ள இன்றைய அரசியல்

கொள்கைக் கோட்பாடு பின்னணி நம்பிக்கை நாணயம் என்றெல்லாம் சில கோட்பாடுகள் இருந்த காலம் கடந்து தற்போது அரசியல் மட்டுமல்ல சகல துறைகளையும் வழிப் போக்கர்கள் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளனர்.

ஏனெனில் கொள்கை கோட்பாடு எதுவும் இல்லாதவர்கள் தானே வழிப் போக்கர்கள் இவர்களுக்கு எல்லாமே ஒன்றுதான் யோகம், ரோகம், போகம் இம்மூன்றையும் ஒரே நோக்கிலே பார்ப்பார்கள் அதனால் அவர்கள் எந்தத் துறையிலும் பிரகாசிக்க முடியும்.

சந்தர்ப்பத்திற்கு ஏற்ற மாதிரி சகல விடயங்க ளிலும் நியாய அநியாயங்களை கண்டுகொள்ள மாட்டார்கள் இவ்வாறானவர்கள் தான் நாட்டில் தற்போது அதிகரித்து விட்டனர் "வால் பிடித்து வாழ்வாரே வாழ்வார்" எனும் நிலை மெய்மைநிலைக்கு வந்துவிட்டது.

தற்போது எந்த இடத்திலும் உண்மை போசுவதோ நியாயம் கேட்பதோ என்பது எதிர்வினையாகவே நோக்கப்படுகிறது. யதார்த்தவாதி வெகுசன விரோதி எனும் எழுதப் படாத மரபை எல்லோரும் கடைப்பிடிக்கும் நிலை உருவாகிவிட்டது. அதனால் உண்மை விளம்பிகளின் நிலை பரிதாபத்துக்குரிய தாகியுள்ளது நாட்டில் உள்ள விளம்பரங்கள் போல் அல்லது இன்றைய தயாரிப்புகள் மாதிரி மனித வாழ்வியலும் அவ்வாறு வந்துவிட்டது உருவகப்படுத்தலாளர்களால் தான் பெரியவர் கள், நல்லவர்கள், வல்லவர்கள் எனும் நிலை அதாவது சட்டம்பிகளின் வாதாட்டம் போலே வாழ்க்கையும் உருவெடுத்துவிட்டது.

எங்கும் பொய்யும் புழுகும் ஏமாற்றும் வஞ்சமும் கபடமும் காட்டிக் கொடுப்பும் தான் வாழ்வாகி விட்டது இந்த வாழ்வியல் முறையையேபலரும் விரும்புகின்றனர். ஆகவே இவற்றுக்கு அச்சாணி யாக திகழ்வது அரசியல் வாதிகளே அவர்கள் தான் சமுதாயத்தை இவ்வாறு ஏமாற்றிப் பேசி இழிநிலைக் குட்படு த்தியவர்கள்.

அரசியல் வாதிகள் தாம் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக எதும் செய்யத்தயங்க மாட்டார்கள் உலகிலே அதிக ஏமாற்றுக்காரர்கள் அரசியல் வாதிகள் தான் என அண்மையில் ஓர் ஆய்வு வெளிவந்தி ருந்தமையும் குறிப்பிடத்தக்கது இதற்கு வழிப் போக்கர்கள் தான் காரணம். உலகம் முழுவதும் பிற்போக்கு தனத்தாலும் பின் கதவாலும் நுழைந்தவர்களே ஆளும் நிலை உருவாகி விட்டது இலங்கையிலும் இதே நிலைதான் தோன்றி விட்டது வரலாற்று சாம்ராஜ்ஜியங்கள் எல்லாம் சரிவுகாணும் நிலையே ஏற்பட்டுள்ளது இதற்கு தமிழ் அரசியலும் விதிவிலக்கில்லை அதிலும் வழிப்போக்கர்களே முதன்நிலை பெறுகிறார் கள். எனவே எப்படி சமுதாயத்தில் உண்மையை எதிர்பார்க்க முடியும்.

# முல்லைத்தீவில் ஆடை தொழிற்சாலைக்கு ஆட்சேர்க்கும் இராணுவம்



யுத்தத்தின் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிய ஆடை தொழிற்சாலை ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

இந்த ஆடை தொழிற்சாலை நிர்மாணிக்கப்படுவதன் மூலம் தொழில் வாய்ப்பின்றி இருக்கும் 150 யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என முல்லைத்தீவு படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.
போரில் பாதிக்கப்பட்ட யுவதிகளுக்கு இதன் மூலம் வாழ்வாதார வசதிகள் கிடைக்கும் எனவும் நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

ஆடைத் தொழிற்சாலைகளுக்கு யுவதிகளை சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் நேற்று புதுக்குடியிருப்பு படைத் தலைமையகத்தில் நடைபெற்றது. இதில் 200 யுவதிகள் கலந்து கொண்டனர்.

## முன்னாள் போராளிகளை பணியில் அமர்த்த சிங்கப்பூர் ஆர்வம்

புனர்வாழ்வு பயிற்சியளிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் 40 பேருக்கு தொழில் வாய்ப்புகளை வழங்க சிங்கப்பூர் ஆர்வத்தை வெளியிட்டுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளரின் பணியகம் தெரிவித்துள்ளது.
கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க தேசிய செயற்திட்டத்தின் கீழ் தற்போது 132 முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு தற்போது புனர்வாழ்வு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

2009ம் ஆண்டு போர் முடிவிற்கு வந்த பின்னர் 12 ஆயிரம் புலிப் போராளிகள் சரணடைந்ததாக புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் ஜெகத் விஜேதிலக்க தெரிவித்தார்.

132 முன்னாள் புலிப் போராளிகளுக்கு வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் ஒரு வருடகால புனர்வாழ்வு பயிற்சிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

புனர்வாழ்வு பயிற்சிகளை பெறும் போராளிகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் தொடர்ச்சியாக பார்வையிட்டு வருவதுடன் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் சந்தித்து வருகின்றனர்.

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை புனர்வாழ்வு பயிற்சிகளை முடித்தவர்கள் விடுவிக்கப்பட்டு வருவதுடன் ஜுன் மாதம் மற்றுமொரு தொகுதியினர் விடுவிக்கப்பட உள்ளனர்.

புனர்வாழ்வு பயிற்சிகள் வழங்கப்பட்டவர்களில் 230 பேர் உயர்கல்வி தகுதிகளை பெற்றுள்ளதுடன் 35 பேர் பல்கலைக்கழங்கங்களில் பயின்று வருகின்றனர் எனவும் விஜேதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

# சீனாவை கைவிட்டு இந்தியாவுடன் உறவை பலப்படுத்த வேண்டும்: ஐ.தே.க

இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடியின் இந்திய அரசியல் வருகையுடன் வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினை தொடர்பாக மிக கவனமாக செயற்படும் நிலைமை இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

ராஜீவ் காந்தியின் கொலை மற்றும் அயல்நாடு என்ற வகையில் இலங்கையுடன் காந்தி குடும்பத்திற்கு இருக்கும் பிணைப்பு காரணமாக, இந்தியாவின் காங்கிரஸ் அரசாங்கம் இலங்கை தொடர்பாக செயற்பட்ட விதத்திற்கு மாறாக மோடி அரசாங்கம் செயற்படும்.

ஜெயலலிதாவுடன் மோடிக்கு இருக்கும் நெருக்கம் மற்றும் தமிழகத்தில் இருக்கும் 55 மில்லியன் மக்களின் நிலைப்பாடுகளுக்கு முரணாக மோடியால் செயற்பட முடியாது.

ராஜபக்ச அரசாங்கம் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பில் இதுவரை கையாண்ட கொள்கையின் அடிப்படையில் பிரச்சினையை மேலும் மூடி மறைக்க முயற்சிக்க கூடாது.

மோடிக்கு தனிப்பட்ட லாப நோக்கமோ, தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலோ கிடையாது. அவரது ஒரே நோக்கம் இந்தியா மற்றும் அந்நாட்டு மக்களின் வளர்ச்சி என்பதால், இலங்கை கவனமாக செயற்பட்டு பிரச்சினை தீர்க்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை.

இந்தியா, இலங்கையில் தலையீடுகளை மேற்கொள்ள இடமளிக்காது அரசாங்கம் நேர்மையாக 13வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி அதிகாரத்தை பரவலாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்னும் சில வருடங்களில் இந்தியாவின் பொருளாதாரம் சிறந்த மாற்றத்திற்கு உள்ளாகும். அதன் பிரதிபலனை இலங்கையும் பெறும் வகையில் பொருத்தமான சூழலை ஏற்படுத்த வேண்டும்.

அரசாங்கம் தொடர்ந்தும் சீனாவை வழிப்பட்டு கொண்டு நெருப்பு வட்டிக்கு அந்நாட்டிடம் கடனை பெறுவதை நிறுத்தி விட்டு, இலங்கையின் அயல் நாடான இந்தியாவுடனான உறவுகளை வலுப்படுத்த வேண்டும் எனவும் சுஜீவ சேனசிங்க குறிப்பிட்டுள்ளார்.

# பெற்றோருக்கு இடையில் மோதல்! கொழும்பு அசோகா வித்தியாலயத்தில் பதற்றம்

கொழும்பு மருதானை அசோகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்களுக்கு இடையில் இன்று காலை மோதல் ஏற்பட்டுள்ளது.

நேற்று காலை 7.30 அளவில் இடம்பெற்ற இந்த மோதலில் தாக்குதலுக்கு உள்ளான பெண்ணொருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அசோகா வித்தியாலய அதிபராக வை. யசரத்ன என்பவர் மீண்டும் நியமிக்கப்பட்டதை கண்டித்து எதிர்ப்பில் ஈடுபட்ட பெற்றோருக்கும், அதிபருக்கு ஆதரவான தரப்பினருக்கும் இடையில் இந்த மோதல் ஏற்பட்டுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த சிலர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனநாயகக் கட்சியின் வாக்குப் பலத்தை குறைத்து மதிப்பீடு செய்ய முடியாது: சரத் பொன்சேகா

ஜனநாயகக் கட்சியின் வாக்கு பலத்தை குறைத்து மதிப்பீடு செய்ய முடியாது என அக்கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஜனநாயகக் கட்சிக்கு பத்து லட்சம் வாக்காளர்கள் ஆதரவளித்து வருகின்றனர்.
ஜே.வி.பி கட்சிக்கும் ஆறு லட்சம் வரையிலான வாக்காளர்கள் ஆதரவளித்து வருகின்றனர்.

நாட்டின் பிரதான இரண்டு அரசியல் கட்சிகளுக்கு அடுத்த நிலையில் ஜே.வி.பி மற்றும் ஜனநயாகக் கட்சி ஆகியன திகழ்கின்றன.

எனவே, ஜனநயாகக் கட்சியை எவரும் குறைத்து மதிப்பீடு செய்ய முடியாது.

பொதுத் தேர்தலுக்கு சென்றாலும், ஜனாதிபதி தேர்தலுக்கு சென்றாலும் எமது பலத்தை யாராலும் மறந்து விட முடியாது.

அரசியல் சாசனத்தை மாற்றுவதாகவும், நிபந்தனைகளை விதிப்பதாகவும் பல கதைகளைக் கூறி வரும் சில கட்சிகளுக்கு காய்ச்சல் எடுக்கத் தொடங்கியுள்ளதாக சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டே பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## பெண் உட்பட 4 போதைப் பொருள் விற்பனையாளர்கள் கைது

ஹெரோயின் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த மூன்று பேர் புத்தளம் மணல்குண்டு பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.
புத்தளம் பொலிஸின் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் இவர்கள் கைது செய்யப்பட்டதுடன், சந்தேக நபர்களிடம் இருந்து 1.70 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக புத்தளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே கஞ்சா போதைப் பொருளை வைத்திருந்த பெண்ணொருவர் திஸ்ஸமஹாராம பெரலிஹெல பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான பெண்ணிடம் இருந்து 400 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட பெண் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## தரகுப் பணம் கேட்டதால் இலங்கையைக் கைவிட்ட கூகிள்

வெளிநாட்டவர்கள் அந்நிய செலாவணியுடன் ஏதாவது ஒன்றை செய்ய இலங்கைக்கு வருகின்றனர். அவர்களிடம் தரகு பணம் கேட்டால் அவர்கள் நாட்டில் இருப்பார்களா என அசாத் சாலி கேள்வி எழுப்பியுள்ளார்.

கூகிள் இலங்கைக்கு வந்திருந்தால் நாட்டுக்கு கோடிக்கணக்கில் நன்மை ஏற்பட்டிருக்கும். இலங்கையில் உள்ள பல பிள்ளைகளுக்கு தொழில் வாய்ப்பு கிடைத்திருக்கும்.

மூன்று அமெரிக்கர்கள் இலங்கைக்கு வந்து கூகிள் நிறுவனத்தின் கிளை ஒன்றை ஆரம்பிக்க பேச்சுவார்த்தை நடத்தினர்.

அனைத்தையும் பேசிய பின்னர், தரகு பணம் கேட்டதால், அந்த நிறுவனத்தினர் இலங்கையில் கிளையை ஆரம்பிக்கும் எண்ணத்தை கைவிட்டு திரும்பிச் சென்று விட்டனர். இப்படித்தான் பல முக்கிய நிறுவனங்கள் இலங்கைக்கு வந்து திரும்பி செல்கின்றன.

சீனாவில் நடைபாதைகளில் இருப்பவர்களே இலங்கையில் அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். இலங்கை தற்போது சீனாவின் காலனியாவிட்டது என அசாத் சாலி மேலும் குறிப்பிட்டார்.

## ஐ.நா. தலைவர் பதவி உகண்டா வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவதாக இலங்கை உத்தரவாதம்

ஐக்கிய நாடுகள் பொதுச் சபை தலைவர் பதவிக்கு போட்டியிடும் உகண்டாவின் வேட்பாளரான சாம் குஸ்டேசாவுக்கு முழுமையான ஆதரவு வழங்கப்படும் என்பதை இலங்கை உறுதிப் படுத்தியுள்ளது.

கொழும்பில் ஜனாதிபதி மாளிகையில் உகண்டா வெளிவிவகார அமைச்சர் ஒகேலோ ஓர்யம் தன்னை சந்தித்த போது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இந்த உத்தரவாதத்தை வழங்கினார்.

இலங்கையின் உள்நாட்டுப் போருக்கு பின்னர் உகண்டா மற்றும் இலங்கை இடையிலான இருத்தரப்பு உறவுகள் வலுவாக வளர்ச்சியடைந்துள்ளன.

இலங்கை எதிராக ஜெனிவா மனித உரிமை பேரவையில் கொண்டு வரப்பட்ட இரண்டு யோசனைகளின் போது உகண்டா இலங்கை ஆதரவாக செயற்பட்டது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபை தலைவர் ஒரு வருடத்திற்காக உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் வாக்களித்து தெரிவு செய்கின்றனர்.

தலைவராக தெரிவு செய்யப்படும் நபர் பொதுச் சபை அமர்வுகளுக்கு தலைமை தாங்குவார்.

தற்போது ஐ.நா. பொதுச் சபை தலைவராக அண்டிகுவா மற்றும் பெர்முடாவைச் சேர்ந்த ஜோன் வில்லியம் ஆஸ் பதவி வகித்து வருகிறார்.

இலங்கையில் கடந்த மாதம் நடைபெற்ற சர்வதேச இளைஞர் மாநாட்டில் ஆஸ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டதுடன் ஜனாதீபதி மகிந்த ராஜபக்சவையும் சந்தித்தார்.

# இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல்

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் மீண்டும் ஒருமுறை தாக்குதல் நடத்தியுள்ளனர்.
இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தின் போது தமிழக மீனவர்களின் ஒரு படகு கடலில் மூழ்கடிக்கப்பட்டதுடன் மற்றொரு படகு சேதமாக்கப்பட்டது.

அத்துடன் தமிழக மீனவர்கள் பிடித்த இறால்களையும் இலங்கை கடற்படையினர் அள்ளிச்சென்றதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் விடுவிக்கப்பட்ட 32 தமிழக மீனவர்கள் இன்று சர்வதேச கடற்பரப்பில் வைத்து இந்திய கரையோர காவல் துறை[illegible] கப்பட்டனர்.

## இன்று

வைகாசி -23 வெள்ளிக்கிழமை 06.06.2014

திதி: அட்டமி
நட்சத்திரம்: பூரம்

சுப நேரம்: 5.52 - 7.22 வரை
இராகு காலம்: 10.22 - 11.52 வரை
எமகண்டம்: 2.52 - 4.22 வரை



## இன்றைய பலன் - வழங்கியவர் மணிகண்டன்

06.06.2014

**மேஷம்**



இன்று, உங்கள் பணிகளில் மேம்போக்காக செயல்படுகிற மனநிலை கொள்வீர்கள். இதனால், சிரம சூழ்நிலை வரலாம். கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சீர்பெற சில நடைமுறை மாற்றம் பின்பற்றுவது அவசியம். சராசரி அளவில் பணவரவு இருக்கும். போக்குவரத்தில் கவன நடை நல்லது.

**ரிஷபம்**



இன்று, இயன்ற அளவில் பிறருக்கு உதவுவீர்கள். உதவி பெற்றவர், நன்றி உணர்வுடன் மனதார வாழ்த்துவர். தொழில், வியாபாரம் செழித்து, புதிய சாதனை இலக்கை உருவாக்கும். உபரி பணவருமானம் கிடைக்கும். விருந்து, விசேடத்தில் கலந்து கொள்வீர்கள்.

**மிதுனம்**



இன்று, குழப்பமான மனதுடன் செயல்படுவீர்கள். எதிர்கால நலன் சார்ந்த, பணி நிறைவேற்றுவதில் தாமதம் இருக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைய, அதிக உழைப்பு அவசியமாகும். விற்பனையாளரின், பகட்டான பேச்சை நம்பி, அதிக பயன் தராத பொருள் வாங்க வேண்டாம்.

**கடகம்**



இன்று, உங்கள் பேச்சில் அறிவுத்திறமை நிறைந்திருக்கும். நண்பரின் முக்கிய உதவியால், எதிர்பார்த்த நன்மை ஏற்படும். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் காண்பீர்கள். உபரி பண வருமானம் கிடைக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித்தருவீர்கள்.

**சிம்மம்**



இன்று, நீங்கள் திட்டமிட்ட பணியில் மாற்றம் செய்ய நேரிடலாம். புதியவரை முழுமையாக நம்பி, நட்பு பாராட்டுவதில் தகுந்த கவனம் வேண்டும். தொழில், வியாபாரத்தில் சிறு இடையூறு வந்து, பின்னர் சரியாகும். சேமிப்பு பணம், முக்கிய செலவுக்கு பயன்படும். சீரான ஓய்வு, உடல் நலம் பெற உதவும்.

**கன்னி**



இன்று, உங்களின் இனிய பேச்சால், பல்வேறு நன்மைகளை பெறுவீர்கள். சமூகத்தில் உயரிய மதிப்பு, மரியாதை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் வளர்ச்சி நிலை ஏற்படும். உபரி பணவருமானம் கிடைக்கும். வீட்டுக்கு தேவையான முக்கிய பொருள் வாங்குவீர்கள்.

**துலாம்**



இன்று, நீங்கள் விட்டுக்கொடுக்கும் மனதுடன் செயல்படுவீர்கள். ஆதாய பலன் பெற, நல்ல வாய்ப்பு தேடிவரும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட அபிவிருத்தி பணி, சிறப்பாக நிறைவேறும். தாராள பணவரவில், ஒரு பகுதியை சேமிப்பீர்கள். இஷ்ட தெய்வ வழிபாட்டை, இனிதாக நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்**



இன்று, உங்கள் செயல்களில், ஆரவாரம் இல்லாமல் பார்த்துக் கொள்வது நல்லது. உறவினர்களின் தகுந்த ஆலோசனை, புதிய நல்வழி பெற உதவும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற மாறுபட்ட சூழ்நிலையை சரி செய்வீர்கள். குடும்ப செலவுக்கு, தேவையான பணவரவு கிடைக்கும். உணவுப்பொருள் தரம் அறிந்து உண்ணவும்.

**தனுசு**



இன்று, உங்கள் மனம் வருந்தும் வகையில், சிலர் செயல்படுவர். எதிர் பார்ப்புகளை குறைத்துக் கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். கூடுதல் உழைப்பினால், எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். உடல்நல ஆரோக்கியம் பெற, சிறு அளவிலான மருத்துவச் சிகிச்சை உதவும்.

**மகரம்**



இன்று, உங்கள் நண்பர், உறவினர்களின் கூடுதல் அன்பை பெறுவீர்கள். செயல்களில் சாதனை உருவாக்க, உரிய வாய்ப்பு தேடி வரும். தொழில், வியாபாரம் செழிக்க, கூடுதல் மூலதனம் செய்வீர்கள். உற்பத்தி, விற்பனை சிறந்து திருப்திகரமான வகையில், பணவரவைத் தரும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உருவாகும்.

**கும்பம்**



இன்று, மனதில் கூடுதல் தைரியம் உருவாகப் பெறுவீர்கள். போட்டி, பந்தயத்தில் நன்மை பெற, அனுகூலம் உருவாகும். தொழில், வியாபாரம் செழித்து, உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். தாராள பணவரவில் கொஞ்சம் சேமிப்பீர்கள். குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**மீனம்**



இன்று, உங்கள் செயல்களில் சிறு தடுமாற்றம் ஏற்படலாம். எதிர் மனப்பாங்குடன் பேசுபவரிடம், விலகிப்போவதால் நன்மை உண்டு. தொழிலில் நிறைவேற்ற வேண்டிய பணியை, ஆர்வமுடன் மேற்கொள்ளவும். புதிய இனங்களில் பணச்செலவு ஏற்படலாம். உணவுப்பொருள் தரம் அறிந்து உண்பதால், உடல் ஆரோக்கியம் பலம்பெறும்.

## சிந்திக்க சில வரிகள்

சரியானது எது என்று தெரிந்த பின்பு
அதை செய்யாமல் இருப்பது தான்
கோழைத்தனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அத்தியாயம் - 07

# பொன்னியின் செல்வன்

அரசுரிமையைப் பற்றிப் பழுவேட்டரையரின் வார்த்தைகளைக் கேட்டதும் வந்தியத்தேவன் உடனே ஒரு முடிவுக்கு வந்தான். அரசுரிமையைப் பற்றி இவர்கள் என்ன பேசப் போகிறார்கள்? இவர்கள் யார் பேசுவதற்கு? இந்தக் கூட்டத்தில் நடக்கப் போவதை அறிந்து கொண்டே தீரவேண்டும்! இங்கேயே உட்கார வேண்டியதுதான். இதைக் காட்டிலும் வசதியான இடம் வேறு கிடையாது. ஆழ்வார்க்கடியான் எப்படியாவது போகட்டும் அவனைப்பற்றி நமக்கு என்ன கவலை?

இன்றைக்கு இங்கு ஏதோ மர்மமான நிகழ்ச்சி நடைபெறப் போகிறது என்ற எண்ணம் வந்தியத்தேவன் மனத்தில் முன்னமே உண்டாகியிருந்தது. ஆழ்வார்க்கடியானின் விபரீதமான பொருள் தரும் வார்த்தைகள், கோட்டை வாசற் காவலர்களின் துடுக்கான நடத்தை, சம்புவரையரின் அரைமனதான வரவேற்பு, வெறியாட்டம் ஆடிய சந்நதக்காரனின் ஆவேச மொழிகள் வையெல்லாம் அவனுக்கு ஏதேதோ சந்தேகங்களை உண்டாக்கியிருந்தன. அந்தச் சந்தேகங்களையெல்லாம் நீக்கிக் கொள்ளவும், உண்மையை அறிந்து கொள்ளவும் இதோ ஒரு சந்தர்ப்பம் தெய்வா தீனமாகக் கிடைத்திருக்கிறத் அதை ஏன் நழுவவிட வேண்டும்? ஆகா! தன்னுடைய உயிருக்குயிரான நண்புன் என்று கருதி வந்த கந்தமாறன் கூடத் தன்னிடம் உண்மையைச் சொல்லவில்லை. தன்னைத் தூங்க வைத்துவிட்டு, இந்த ரகசிய நள்ளிரவுக் கூட்டத்துக்கு வந்திருக்கிறான். அவனை நாளைக்கு ஒரு கை பார்க்க வேண்டியதுதான்.

இதற்குள் கீழே பழுவேட்டரையர் பேசத் தொடங்கி விட்டார். வந்தியத்தேவன் காது கொடுத்துக் கவனமாகக் கேட்கலானான். உங்களுக்கெல்லாம் மிக முக்கியமான ஒரு செய்தியை அறிவிக்கவே நான் வந்திருக்கிறேன். அதற்காகவே இந்தக் கூட்டத்தைச் சம்புவரையர் கூட்டியிருக்கிறார். சுந்தரசோழ மஹாராஜாவின் உடல்நிலை மிகக் கவலைக்கிடமா யிருக்கிறது. அரண்மனை வைத்தியர்களிடம் அந்தரங் கமாகக் கேட்டுப் பார்த்தேன். அவர்கள் இனிமேல் நம்பிக்கைக்கு இடமில்லை அதிக காலம் உயிரோடு இருக்க மாட்டார் என்று சொல்லி விட்டார்கள். ஆகவே, இனிமேல் நடக்க வேண்டிய காரியங்களைப்பற்றி நாம் இப்போது யோசித்தாக வேண்டும்! என்று கூறிப் பழுவேட்டரையர் நிறுத்தினார்.

ஜோசியர்கள் என்ன சொல்கிறார்கள்? என்று கேட்டார் கூட்டத்தில் ஒருவர். ஜோசியர்களைப் போய்க் கேட்பானேன்? சில நாளாகப் பின் மாலை நேரத்தில் வானத்தில் வால்நட்சத்திரம் தெரிகிறதே! அது போதாதா! என்றார் ஒருவர். பின்னர் பழுவேட்டரையர் கூறினார்: ஜோசியர்களையும் கேட்டாகிவிட்டது அவர்கள் சில காலம் தள்ளிப் போடுகிறார்கள் அவ்வளவுதான். எப்படியிருந்தாலும், அடுத்தாற்போல் பட்டத்துக்கு உரியவர் யார் என்பதை நாம் யோசித்தாக வேண்டும் அதைப் பற்றி இனி யோசித்து என்ன ஆவது? ஆதித்த கரிகாலருக்குத்தான் இளவரசுப் பட்டம் இரண்டு வருஷத்துக்கு முன்பே கட்டியாகி விட்டதே! என்று இன்னொரு கம்மலான குரல் கூறியது. உண்மைதான், ஆனால் அப்படி இளவரசுப் பட்டம் கட்டுவதற்கு முன்னால் நம்மில் யாருடைய யோசனை யாவது கேட்கப்பட்டதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இங்கே கூடியுள்ள நாம் ஒவ்வொருவரும் நூறு ஆண்டுக்கு மேலாக, நாலு தலைமுறையாக, சோழ ராஜ்யத்தின் மேன்மைக்காகப் பாடுபட்ட பழங்குடியைச் சேர்ந்தவர்கள். என் பாட்டனாருக்குத் தந்தை திருப்புறம்பியம் போரில் இறந்தார். என் பாட்டனார் வேளூரில் நடந்த போரில் உயிர் விட்டார். என் தந்தை தக்கோலத்தில் உயிர்த் தியாகம் செய்தார். அம்மாதிரியே உங்கள் ஒவ்வொருவரின் மூதாதையரும் இந்தச் சோழ நாட்டின் மேன்மையை நிலைநாட்டுவதற்காக உயிரைக் கொடுத்திருக்கிறார்கள். நம் ஒவ்வொருவருடைய குடும்பத்திலும் இளம் பிள்ளைகள் யுத்தகளத்தில் செத்திருக்கிறார்கள். இன்றைக்கும் ஈழ நாட்டில் நம்முடைய குலத்தையும் குடும்பத்தையும் சேர்ந்த பிள்ளைகள் போர் செய்து வருகிறார்கள். ஆனால் அடுத்தபடியாகப் பட்டத்துக்கு வரவேண்டியவர் யார் என்பது பற்றித் தீர்மானிப்பதில் நம்முடைய அபிப்பிராயத்தை மகாராஜா கேட்கவில்லை. தசரதர்கூட இராமருக்குப் பட்டம் கட்டுவது பற்றி மந்திராலோசனை சபை கூட்டி யோசனை செய்தார். மந்திரிகளையும், சாமந்தகர்களையும், சேனைத் தலைவர்களையும், சிற்றரசர்களையும் ஆலோசனை கேட்டார். ஆனால் சுந்தர சோழ மகாராஜா யாருடைய யோசனையையும் கேட்பது அவசியம் என்று கருதவில்லை..

நம்மை யோசனை கேட்கவில்லையென்பது சரிதான். ஆனால் யாரையுமே யோசனை கேட்கவில்லையென்று இறைவிதிக்கும் தேவர் கூறுவது சரியன்று. பெரிய பிராட்டியாரான செம்பியன் மகாதேவியின் யோசனையும், இளைய பிராட்டியாரான குந்தவை தேவியின் யோசனையும் கேட்கப்பட்டன. இல்லையென்று பழுவேட்டரையர் கூற முடியுமா? என்று கேலியான தொனியில் ஒருவர் கூறவும், கூட்டத்தில் ஒரு சிலர் சிரித்தார்கள். ஆகா! நீங்கள் சிரிக்கிறீர்கள்! எப்படித்தான் உங்களுக்குச் சிரிக்கத் தோன்றுகிறதோ, நான் அறியேன். நினைக்க நினைக்க எனக்கு வயிறு பற்றி எரிகிறத் இரத்தம் கொதிக்கிறது. எதற்காக இந்த உயிரை வைத்துக் கொண்டு வெட்கங்கெட்டு வாழ வேண்டும் என்று தோன்றுகிறது. இன்று சந்நதம் வந்து ஆடிய தேவராளன் துர்க்கை பலி கேட்பதாகச் சொன்னான். ஆயிரம் வருஷத்துப் பரம்பரை ராஜ வம்சத்தில் பிறந்த நரபலி வேண்டும் என்று சொன்னான். என்னைப் பலி கொடுத்து விடுங்கள். என்னுடைய குலம் ஆயிரம் ஆண்டுகளுக்கும் தொன்மையானது. நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் கத்தியினால் என் கழுத்தில் ஒரு போடு போட்டுப் பலி கொடுத்து விடுங்கள். அன்னை துர்க்கை திருப்தி அடைவாள் என் ஆத்மாவும் சாந்தி அடையும்


இவ்விதம் ஆவேசம் வந்து ஆடிய சந்நதக்காரனைப் போலவே வெறி கொண்ட குரலில் சொல்லிப் பழுவேட் டரையர் நிறுத்தினார். சற்று நேரம் மௌனம் குடிகொண்டிருந்தது. மேற்குத் திசைக் காற்று விர் என்று அடிக்கும் சப்தமும், அந்தக் காற்றில் கோட் டைச் சுவருக்கு வெளியேயுள்ள மரங்கள் ஆடி அலையும் மர்மர சப்தமும் கேட்டன.

ஏதோ தெரியாத்தனமாகப் பேசிவிட்ட பரிகாசப் பேச்சையும், அதனால் விளைந்த சிரிப்பையும் பழுவூர் மன்னர் பொறுத்தருள வேண்டும். தாங்கள் எங்களுடைய இணையில்லாத் தலைவர். தாங்கள் இட்ட கட்டளையை நிறைவேற்ற இங்குள்ளவர் அனைவரும் சித்தமாயிருக்கிறோம். தாங்கள் காட்டிய வழியில் நடக்கிறோம். தயவு செய்து மன்னித்துக் கொள்ள வேண்டும்! என்று சம்புவரையர் உணர்ச்சியுடனே கூறி னார்.

நானும் கொஞ்சம் பொறுமை இழந்து விட்டேன். அதற்காக நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். ஒரு வி'யத்தை எண்ணிப் பாருங்கள். சரியாக இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னால் விஜயாலய சோழர் முத்தரையர்களை முறியடித்துத் தஞ்சாவூரைக் கைப்பற்றினார். திருப்புறம்பியம் போரில் பல்லவ சைன்யத்துக்குத் துணையாக நின்று மதுரைப் பாண்டியரின் படையை நிர்மூலமாக்கினார். அது முதல ாவது சோழ ராஜ்யம் நாளுக்கு நாள் பெருகி விஸ்தரித்து வந்திருக்கிறது. காவேரி நதிக்குக் கரையெடுத்த கரிகால் வளவர் காலத்திலேகூடச் சோழ ராஜ்யம் இவ்வளவு மகோன்னதத்தை அடைந்தது கிடையாது. இன்றைக்குத் தெற்கே குமரி முனையிலிருந்து வடக்கே துங்கபத்திரை கிரு'ணை வரையில் சோழ சாம்ராஜ்யம் பரந்து விரிந்து கிடக்கிறது. பாண்டிய நாடு, நாஞ்சில் நாடு, யாருக்கும் இதுவரையில் வணங்காத சேர நாடு, தொண்டை மண்டலம், பாகி நாடு, கங்கபாடி, நுளம்பபாடி, வைதும்பர் நாடு, சீட்புலி நாடு, பெரும்பாணப்பாடி, பொன்னி நதி உற்பத்தியாகும் குடகு நாடு ஆகிய இத்தனை நாடுகளும் சோழ சாம்ராஜ்யத்துக்கு அடங்கிக் கப்பம் செலுத்தி வருகின்றன. இவ்வளவு நாடுகளிலும் நம் சோழ நாட்டுப் புலிக்கொடி பறக்கிறது. தெற்கே ஈழமும் வடக்கே இரட்டை மண்டலமும் வேங்கியும் கூட இதற்குள் நமக்குப் பணிந்திருக்க வேண்டும். அப்படிப் பணியாததற்குக் காரணங்களை நான் சொல்ல வேண்டியதில்லை அவைகள் எல்லாம் உங்களுக்குத் தெரிந்ததுதான்!

ஆம் எல்லோருக்கும் தெரியும் ஈழமும் இரட்டைப் பாடியும் வேங்கியும் கலிங்கமும் பணியாததற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒரு காரணம் வடதிசை மாதண்ட நாயகராகிய இளவரசர் ஆதித்த கரிகாலர் இன்னொரு காரணம் தென் திசைப் படைத் தலைவரான அவருடைய தம்பி அருள்மொழிவர்மர்..

மழவரையர் கூறும் காரணத்தை நான் ஒப்புக் கொள்கிறேன். சென்ற நூறாண்டு காலமாக இந்தச் சோழ நாட்டில் சேனாபதி நியமிக்கும் மரபு வேறாயிருந்தது. பல யுத்தங்களில் ஈடுபட்டு அனுபவம் பெற்ற வீராதி வீரர்களையே படைத் தலைவர்களையும் மாதண்ட நாயகர்களாகவும் நியமிப்பார்கள். ஆனால் இப்போது நடந்திருப்பது என்ன? மூத்த இளவரசர் வடதிசைச் சேனையின் சேனாபதி அவர் என்ன செய்கிறார்? 'இரட்டை மண்டலத்தின் மீதும் வேங்கி நாடு மீதும் படையெடுத்துப் போகவில்லை.



காஞ்சிபுரத்தில் உட்கார்ந்து கொண்டு பொன் மாளிகை கட்டிக் கொண்டிருக்கிறார். வீரப் பெருங்குடியில் பிறந்த வீராதி வீரர்களாகிய உங்களைக் கேட்கிறேன். இதற்கு முன்னால் தமிழகத்தில் எந்த மன்னராவது தாம் வசிப்பதற்குப் பொன்னால் மாளிகை கட்டியதுண்டா? உலகமெங்கும் புகழ் பரப்பி இப்போது கைலாச வாசியாயிருக்கும் மதுரையும் ஈழமும் கொண்ட பராந்தக சக்கரவர்த்திகூடத் தாம் வசிப்பதற்குப் பொன் மாளிகை கட்டிக் கொள்ளவில்லை. தில்லைச் சிற்றம்பலத்துக்குத்தான் பொன் கூரை வேய்ந்தார். ஆனால் இளவரசர் ஆதித்த கரிகாலர் தாம் வசிப்பதற்குக் காஞ்சிபுரத்தில் பொன் மாளிகை கட்டுகிறார்! பல்லவ சக்கரவர்த்திகள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து ராஜ்ய பாரம் புரிந்த அரண்மனைகள் இவருடைய அந்தஸ்துக்குப் போதவில்லையாம். பொன்னிழைத்த அரண்மனை கட்டுகிறார். ரத்தினங்களையும் வைடூரியங்களையும் அப்பொன் மாளிகைச் சுவர்களில் பதிக்கிறார். கங்கபாடி, நுளம்பபாடி, குடகு முதலிய நாடுகளில் வெற்றியடைந்து, கைப்பற்றிக் கொண்டு வந்த பொருளில் ஒரு செப்புக் காசாவது தலைநகரிலுள்ள பொக்கி' சாலைக்கு அவர் இதுவரை அனுப்பவில்லை..

**பயணம் தொடரும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலை ஏற்க மறுத்த ஆசிரியை சுட்டுக்கொலை

காதலை ஏற்க மறுத்த முன்பள்ளி ஆசிரியை ஒருவரை சுட்டுக்கொலை செய்த சம்பவமொன்று பிபிலைப் பகுதியின் மெதஹின்ன என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது.

மெதஹின்ன என்ற இடத்தைச் சேர்ந்த அத்தநாயக்க முதியன்சலாகே ஜயலதா என்ற 40 வயது நிரம்பிய குடும்பப்பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளவராவார்.

இப்பெண் தனது மகளுடன் தொலைக் காட்சியை பார்த்துக் கொண்டிருந்த வேளை, வீட்டு யன்னல் வழியாக வந்த நபர் குறிப்பிட்ட முன்பள்ளி ஆசிரியையை துப்பாக்கியினால் சுட்டுவிட்டு தப்பிப் யோடியுள்ளார்.

இக்கொலை தொடர்பாக மேற்கொள்ள ப்பட்ட விசாரணையின் போது கொலையுண்ட முன்பள்ளி ஆசிரியையுடன் கள்ளக்காதலை மேற்கொள்ள அக்கிராமத்தின் இளைஞர் ஒருவர் முயற்சித்துள்ளதாகவும் அவ் இளைஞனால் முன்வைக்கப்பட்ட காதல் கோரிக்கையை குறிப்பிட்ட ஆசிரியை நிராகரித்ததாகவும் இதனால் ஆத்திரம் கொண்ட குறித்த இளைஞன் ஆசிரியையை சுட்டுக் கொலை செய்து விட்டு தம்பியோடியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

## காலி கராபிட்டிய வைத்தியசாலையில் பேய் நடமாட்டம்?

தென் மாகாணத்தின் காலி கராபிட்டிய போதனா வைத்தியசாலையில் பேய்களின் நடமாட்டம் காணப்படுவதாக பீதி ஏற்பட்டுள்ளது.

பேய்களின் நட்டமாட்டம் காரணமாக கடமைகளில் ஈடுபட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக சில ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாட்களாகவே வைத்தியசாலை ஊழியர்கள், வைத்தியசாலை கட்டடத்தின் சில பகுதிகளில் பேய்களின் நடமாட்டத்தை அவதானித்ததாக தெரிவித்துள்ளனர்.

தலையில்லாத முண்டங்கள் நடமாடுவதாகவும், அண்மையில் உயிரிழந்த ஓர் நோயாளி நடமாடுவதாகவும் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இரவு நேர கடமையில் ஈடுபடும் சில ஊழியர்கள் பேய்களின் நடமாட்டத்தை கண்டு பீதியடைந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதனால் இரவு நேர கடமையில் ஈடுபட சில ஊழியர்கள் நாட்டம் காட்டுவதில்லை எனத் தெரியவருகிறது.

இதனால், வைத்தியசாலையில் பிரித் பாராயண நிகழ்வு ஒன்றை நடாத்தி பேய்களை விரட்டியடிக்க வைத்தியசாலை நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

## தம்புள்ளை பள்ளிவாசல் விவகாரம்

### முஸ்லிம் அமைச்சர்களுடன் பேசி சுமுக தீர்வு காண்பதாக ஜனாதிபதி உறுதி



தம்புள்ளை பள்ளிவாசல் விவகாரம் தொடர்பாக முஸ்லிம் அமைச்சர் களுடன் பேசி சுமுக தீர்வு காண்பதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அனைத்து இனங்களுக்காகவும் குரல் கொடுப்பதாகக் கூறிவரும் ஐ.தே.க சிறுபான்மையினரின் பிரச்சினை தொடர்பில் பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்ப முற்படும்போது அதனைத் தடுக்கும் வகையில் செயற்படுவதாகிவும் அவர் கூறினார்.

தம்புள்ளை பள்ளிவாசல் விவகாரம் தொடர்பாக ஆங்கில ஊடக மொன்றில் வெளியிடப்பட்டிருந்த செய்தி தொடர்பில் பாராளுமன்றத்தில் விசேட அறிவிப் பொன்றை வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சரின் உரைக்கு இடையூறாக எதிர்க்கட்சியின் பிரதம கொரடா ஜோன் அமரதுங்க கருத்துத் தெரிவித்தார்.

இதன்போது பதிலளித்த அமைச்சர், சிறுபான்மை கட்சிகள் தமது கருத்துக்களை முன்வைக்க முயலும் போது எதிர்க்கட்சி அதற்கு தடங்கலாக செயற்படுவதாகக் குற்றஞ்சாட்டிய அவர், எமது உரிமைகளுக்காக குரல் கொடுக் கையில் இவ்வாறு நடந்து கொள்வது உகந்ததல்ல என்றும் குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது,
தம்புள்ளை பள்ளிவாசல் விவகா ரத்தில் தலையிட்டு சுமுகமான தீர்வு பெற்றுத்தருவதாக ஜனாதிபதி எம்மிடம் உறுதியளித்திருந்தார். இது தொடர்பில் முஸ்லிம் அமைச்சர்களைச் சந்தித்துப் பேசுவதாகவும் கூறியிருந்தார்.

சிறுபான்மையினருக்கு தாம் விரும்பிய மதத்தை வழிபட உரிமையுள்ளது. முஸ்லிம்கள் என்று கூறிக்கொள்ளும் சிலர் பள்ளிவாசலை அகற்ற இணக்கப்பாட்டுக்கு வந்திருப்பதை ஏற்க முடியாது.

இந்த விவகாரம் முழு முஸ்லிம்களுடன் தொடர்புபட்டதாகும். பள்ளிவாசல் விவகாரம் தொடர்பாக தம்புள்ளை விகாராதிபதியுடன் பேசி இணக்கப்பாடு காணப்பட்டதாக கூறப்பட்டாலும் இது தொடர்பில் முஸ்லிம் அமைச்சர்களுக்கு தெளிவுபடுத்தப்படவில்லை. இது தொடர்பில் ஊடகங்களில் தெரிவி க்கப்பட்ட விடயம் எந்தளவு உண்மை என வினவுகிறேன் என்றார் ஹக்கீம்.

## வந்தாறுமூலையில் வர்த்தக நிலையத்தின் உரிமையாளரை மிரட்டி கொள்ளை

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் பிரதேசத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்று இனந் தெரியாதவர்களினால் கொள்ளை யிடப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை 6.15மணியளவில் வந்தாறுமூலை அம்பலத்தடி சந்தியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றிலேயே இந்த துணிகர கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

காரில் வந்த இருவர் வர்த்தக நிலையத்தின் உரிமையாளரை மிரட்டி சுமார் 70ஆயிரம் ரூபா பணத்தினை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பிலான விசாரணையினை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த நபர் கத்திக்குத்துக்கு இலக்காகி பலி

பொலனறுவையில் ஹிங்குராக்கொட, கிரிமெட்டிய கல்அமுன பிரதேசத்தில் நபரொருவர் கத்தி குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

பிரதேசத்தின் அரிசி ஆலையில் கடமையாற்றி வந்தவரே இவ்வாறு இன்று கொல்லப்பட்டுள்ளார்.


கத்தி குத்துக்கு இலக்காகி படுகாயமடைந்த குறித்த நபர் பொலனறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 31 வயதான களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த நபர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஹிங்குரக்கொட பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளி யிட்டுள்ளனர்.

## மீன் வளர்ப்புத் திட்டத்தினை இடமாற்றுமாறு அரியம் எம்.பியிடம் மக்கள் கோரிக்கை



மட்டக்களப்பு கடுக்காமுனை குளத்திற் கருகில் மீன்குஞ்சு வளர்ப்புத திட்டமொன்று ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும் அத்திட்டமானது, இந்துக்களின் கலாசாரத்திற்கு முரணான வகையில் ஆலயங்களுக்கு அண்மை யில் நடைமுறைப்படுத்தப்பட இருப்ப தனால், உடனடியாக அதனைத் தடை செய்யுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக பாராளுமன்ற உறுப் பினர் பா.அரியநேத்திரன் கூறியதாவது,

நெற்கட்டியடி ஸ்ரீ விக்கினேஸ்வரன், மாரியம்மன் ஆலயங்கள் இரண்டும் இத்திட்டத்திற்கு அருகாமையில் இருப்பதன் காரணமாக இத்திட்ட த்தினை நடைமுறைப் படுத்துவதனை உடனடியாக தடை செய்யுமாறு இப்பிரதேசத்தில் உள்ள 10 பொது அமைப்புக்கள் கேட்டுக்கொண்டனர்.

இதற்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி சாள்ஸுடன் தொடர்பு கொண்டு இத்திட் டம் தொடர்பாகவும் இதனால் ஏற்படப்போகும் பின்விளைவுகள் பற்றியும் எடுத்துக் கொண்தற்கு இணங்க அவர் அதனை ஏற்றுக் கொண்டு உடனடியாக எழுத்து மூலம் தரும்படி கேட்டுக்கொண்டார்.

அதற்கு இணங்க நடவடிக்கை எடுத் ததாகவும் பிரதேச செயலாள ருக்கும் இது தொடர்பாக அறிவிக்கப் பட்டுள்ளதாகவும் அவரும் இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுப் பதாகவும் கூறினார்.

இத்திட்டமானது மக்கள் நலன்சார்ந்த திட்டமாக இருப்பதன் காரணமாக இத்திட்டத்தினை வேறு ஒரு இடத்திற்கு மாற்றி மக்கள் நலனில் அக்கறை காட்டுமாறு உரிய அதிகாரிகளையும் கேட்டுக்கொண்டார்.

### இந்திய மீனவர்கள் இலங்கை மீன்வளத்தை கொள்ளையிடுகின்றனர்- ஜே.வி.பி

இந்திய மீனவர்கள், இலங்கை மீன் வளத்தை கொள்ளையிட்டு வருவதாக ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்களை விடுதலை செய்ய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நடவடிக்கை எடுத்தார். எனினும், எமது மீனவர்கள் தொடர்ந்தும் இந்திய சிறைகளில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

நாம் நல்லெண்ணத்தை காட்டும் அளவிற்கு இந்தியா நல்லெண்ணத்தை காட்டுவதில்லை. இந்திய மீனவர்கள் சட்டவிரோதமான வலைகளைப் பயன் படுத்தி மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இதனால் மீன் வளம் பாதிக் கப்படுகின்றது.

நாட்டு மீனவர்களினால் உரிய முறையில் மீன்பிடியில் ஈடுபட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினரே வடக்கில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு காரணம்

## சி.வி.விக்னேஸ்வரன்

வடக்கில் இருந்து இராணுவம் அகற்றப்பட்டால் மட்டுமே அங்குள்ளமக்கள் சுதந்திரமாக வாழ முடியும் என வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
வடக்கில் இருந்து இராணுவத்தை அகற்ற எடுக்க வேண்டிய சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அண்மையில் விஜயம் செய்த போதே முதலமைச்சர் இதனை கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
வடக்கில் இராணுவத்தினர் பலர் நிலை கொண்டிருப்பதே காணி சுவீகரிப்பு, மீன்பிடி தொழில் சார்ந்த பிரச்சிரைன உட்பட வடக்கில் அடிப்படையான பிரச்சினைகளுக்கு காரணமாக அமைந்துள்ளது.

பாதுகாப்பு படையினர் காணிகளை கைப்பற்றியுள்ளதன் காரணமாகவே அவற்றின் உரிமையாளர்களான மக்கள் அந்த காணிகளில் வசிக்கவும் விவசாயத்தில் ஈடுபடும் உரிமையும் இல்லாமல் போயுள்ளது எனவும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.



# ஆட்சியாளர்களின் அதர்மமே இயற்கை அனர்த்தங்கள் ஏற்படக் காரணம் கரு ஜயசூரிய

ஜனாதிபதி தலைமையிலான இன்றைய அரசாங்கத்திற்கு நாட்டு மக்களின் வாழ்க்கை குறித்து எந்தவிதமான பொறுப்பும் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவச் சபையின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

தொழில்சார் மற்றும் இராஜந்திரம் பற்றிய இயலாமையால் இன்றைய ஆட்சியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்தத்தால் ஏற்படும் கனமழை, வெள்ளம், பஞ்சம் போன்றவை ஆட்சியாளர்களின் அதர்மம் காரணமாக் ஏற்படுவதாக பௌத்த இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன.

இலங்கையில் இந்த சந்தர்ப்பத்தில் அதுவே ஏற்பட்டு வருகிறது. இதனைக்கூறி அரசியல் மகிழ்ச்சியையும் இலாபத்தையும் பெறும் எந்த நோக்கமும் எமக்கில்லை.

இவற்றுடன் எந்த சம்பந்தமும் இல்லாத அப்பாவி மக்கள் பாதிக்கப்டி பட்டுள்ளமையே இங்கு கவலைக்குரிய விடயமாக உள்ளது.

கடந்த சில நாட்களாக நடைபெற்ற சம்பவங்களை பார்க்கும் போது நாட்டின் ஆட்சியாளர்கள் தம்மை அந்த இடத்திற்கு கொண்டு வந்த மக்கள் சக்தி தொடர்பில் உணர்வுகளையும், அக்கறையையும் கொண்டிருக்கவில்லை என்பது முக்கியமான விடயமாக உள்ளது.

நாட்டு மக்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் உண்மையான பிரச்சினை குறித்து செவிகொடுத்து நாட்டின் பொறுப்பாளர் என்ற வகையில் அவற்றுக்கு தீர்வை வழங்குவதற்கு பதிலாக நாட்டின் ஆட்சியாளர்கள் அதனை முற்றாக மறந்து செயற்பட்டு வருகின்றனர்.

மக்களை மறந்து போன ஆட்சியாளர்கள் எப்போதும் நீண்ட தூரம் பயணித்ததில்லை என்பதற்கு உலக அரசியல் சாட்சியாக உள்ளது.

இந்த அர்த்தத்தில் நோக்கும் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் முடிவு தற்பொழுது ஆரம்பமாகி விட்டது என்பதை தெளிவாக காண முடிகிறது எனவும் கரு ஜயசூரிய குறிப்பிட்டுள்ளார்.

# விளம்பரம் மூலம் பல பெண்களை துஸ்பிரயோகம் செய்த காதல் மன்னன் கைது

திருமணம் முடிப்பதாகக் கூறி, பெண்ணொருவரை காட்டுப் பகுதிக்கு அழைத்துச் சென்று துஸ்பிரயோகம் செய்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹட்டன் பகுதியில் பிரபல தமிழ் பாடசாலை ஒன்றில் கடமையாற்றிய குமாஸ்தா பெண்ணை திருமணம் முடிப்பதாக கூறி கடந்த 31 ம் திகதி நோர்வூட் காட்டுப் பகுதிக்கு கொண்டு சென்று துஸ்பிரயோகம் செய்து தங்க ஆபரணங்களை அபகரித்து, குறித்த பெண்ணை அந்த இடத்திலேயே கை, கால்களை கட்டி விட்டு சென்ற நபரை நேற்றுமுன்தினம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரை நேற்று மாலை ஹட்டன் நீதவான் அமில ஆரியசேனவிடம் ஆஜர்ப்படுத்தியபோது, எதிர்வரும் 16ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதமான் உத்திர விட்டுள்ளார்.

நுவரெலியாவில் வசிக்கும் 31 வயதான மேற்படி சந்தேக நபர், பெண்களை திருமணம் செய்வதாக கூறி பத்திரிகைகளுக்கு மணமகள் தேவை என விளம்பரம் பண்ணி மீண்டும் அதற்கு பதில் கிடைக்கும் போது தொலைபேசி மூலம் தொடர்பு வைத்து பிறகு சந்தித்து இவ்வாறான செயல்களில் ஈடுபடுவதாக நோர்வூட் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இரண்டு குழந்தையின் தகப்பனான இவர், இவ்வாறான சம்பவங்கள் பற்றி நானுஓயா பொலிஸில் 2 முறைபாடுகளும் கொத்மலை பொலிஸில் 1 முறைபாடும் நுவரெலியா நீதிமன்றத்தில் விசாரணை நடந்து கொண்டிருப்பதாகவும் கடந்த மாதம் கொழும்பில் ஒரு பெண்ணை கடத்தி ஹட்டனில் கட்டி வைத்த சம்பவத்திற்கும் மேற்படி சந்தேக நபர்க்கும் சம்பந்தம் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், இந்த சந்தேக நபரோடு மேலும் சில நபர்கள் இருப்பதாகவும் அவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்திருப்பதாகவும் நோர்வூட் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# பிள்ளைகளை பெற்றுக் கொள்ளுங்கள்! முடியாது போனால் கூறுங்கள்

சிங்கள இனம் சிறுபான்மை இனமாக மாறி வருகிறது என்று கூறி கொண்டிருப்பதில் பயனில்லை எனவும் முடிந்தளவு பிள்ளைகளை பெற்றுக் கொள்ளுமாறும், அதில் பிரச்சினைகள் இருந்தால் தனக்கு அறிவிக்குமாறும் அமைச்சர் மேர்வின் சில்வா கூறியுள்ளார்.

வத்தளை பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடுகளை அமைப்பதற்கான கூரைத் தகடுகளை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அங்கு உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டை பைக்குள் போட்டு கொள் ளும்படி பணத்தை சம்பாதிக்க முடியாது போகும் போது சிலர் எமக்கு எதிராக செயற்படுகின்றனர்.

ஜனாதிபதி, அமைச்சர் பசில் ராஜபக்ச பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோர் மாத்திரம் முயற்சித்து நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. பிரதேச சபை முதல் அனைவரும் அதற்கு பங்களிப்பு வழங்க வேண்டும்.

எவர் எதனை கூறினாலும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்பது ஒரு குடும்பம் போன்றது. அதில் தாய் மற்றும் தந்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச

இந்த குடும்பத்தை பிரிக்க எவருக்கும் இடமளிக்க முடியாது. ஜனாதிபதியின் குடும்பத்தினர் மற்றும் பொலியத் தையில் இருந்து வந்த என்னை தவிர ராஜபக்ச குடும்பத்தினர் பற்றி அறிந்தவர்கள் எவரும் இல்லை எனவும் மேர்வின் சில்வா கூறியுள்ளார்.

# சுதந்திரக் கட்சியின் கொழும்பு- கோட்டே தொகுதி அமைப்பாளராக கோத்தபாய?

கொழும்பு மாவட்டத்தின் கோட்டே தொகுதியின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராக கோத்தபாய ராஜபக்சவை நியமிக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.
இந்த நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய கோட்டே தொகுதி அமைப்பாளரான முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகமவை அமைப்பாளர் பதவியில் இருந்த விலகுமாறு ஜனாதிபதி அறிவித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கோத்தபாய ராஜபக்ச, கோட்டே தொகுதியின் அமைப்பளராக நியமிக்கப்பட்ட பின்னர், அவரை தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்து, நகர அபிவிருத்தி அமைச்சர் பதவியும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியும் வழங்கப்பட உள்ளதாக அந்த தகவல்கள் மேலும் தெரிவித்தன.

ஜனாதிபதி கோரினால் பகிரங்க அரசியலுக்கு வருவதற்கு தயாராக இருப்பதாக கோத்தபாய ராஜபக்ச கடந்த வாரம் வெளியான பத்திரிகை ஒன்றில் தெரிவித்திருந்தார்.

கோத்தபாய ராஜபக்சவை குருணாகல் மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட வைக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்', கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் தீர்மானத்திருந்தார்.

குருணாகல் மாவட்டத்தில் இருந்து அரசியலுக்கு வருவதை கோத்தபாய நிராகரித்ததால், ஜனாதிபதி அந்த எண்ணத்தை தற்காலிகமாக கைவிட்டார்.

ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடைபெறும் போது விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க, திலங்க சுமதிபால ஆகியோர் விலகி செல்லக் கூடும் என்பதால், கொழும்பு மாவட்டத்திற்கு தலைமை தாங்கும் பொறுப்பை கோத்தபாயவிற்கு வழங்கும் நோக்கத்தில் ஜனாதிபதி அவரை கோட்டே தொகுதியின் அமைப்பாளராக நியமிக்க முடிவு செய்துள்ளார்.

இலங்கையின் சனத் தொகையில் அதிகளவான மக்கள் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் வாழ்ந்து வருவதால், இந்த மாவட்டங்கள் இரண்டையும் தமது சகோதரர்களின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது தந்திரோபாய ரீதியில் முக்கியம் என்பதை புரிந்து கொண்டுள்ள ஜனாதிபதி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக பேசப்படுகிறது.

# செய்தி இணையத்தளங்கள் மீதான தடை இன்று பாராளுமன்றத்தில் விவாதம்

இலங்கையில் செய்தி இணையத தளங்களை பார்வையிட ஏற்படுத் தப்பட்டுள்ள தடை மற்றும் குறுக்கீடுகள் தொடர்பில் இன்றைய தினம் நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்று நடைபெறவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கடந்த மே 23 ஆம் திகதி சபை ஒத்திவைக்கும் போது, முன்வைத்த யோசனைக்கு அமைய இந்த விவாதம் நடைபெறவுள்ளது.

செய்தி இணையத்தளங்களை பார்விட ஏற்படுத்தப்பட்டுள்ள தடை காரணமாக இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரவு யாப்பில் வழங்கப்பட்டுள்ள சாதாரண நியாயங் களுக்கான உரிமைகள், பேச்சுரிமை, கருத்துச் சுதந்திரம், சட்டரீதியாக தொழில் செய்யும் உரிமை உள்ளிட்ட சுதந்திரங்கள் மீறப்பட்டுள்ளதாக அத்தநாயக்க தனது யோசனையில் சுட்டிக்காட்டியுள்ளார்.
இந்த நிலைமையானது இலங்கையின் ஊடக சுதந்திரம் தொடர்பில் சர்வதேச ரீதியில் ஏற்பட்டுள்ள தோற்றத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் ஸ்ரீலங்கா மிரர், லங்கா ஈ நியூஸ், லங்கா நியூஸ் வெப், லங்கா கார்டியன், கொழும்பு டெலிகிராப், ஜெப்னா முஸ்லிம், தி இண்டிபென்டன் உட்பட பல செய்தி இணையத் தளங்கைளை வாசகர்கள் பார்வையிட முடியாத படி தடை செய்யப் பட்டுள்ளன.

தடை செய்யப்பட்டுள்ள இணையத் தளங்களில் ஸ்ரீலங்கா மிரர் மற்றும் தி இண்டிபென்டன் ஆகிய இணையத தளங்கள் மட்டுமே இலங்கையில் இருந்து பதிவேற்றம் செய்யப் படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடுபிடிக்கப் போகும் 13வது திருத்தச் சர்ச்சை!

இலங்கை அரசியலில் 13வது திருத்தச்சட்ட விவகாரம் இனிச் சூடுபிடிக்கப் போகிறது. கடந்த வாரம் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்திருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் இந்தியத் தரப்பில் இந்த விவகாரம் தான் முக்கியமாக வலியுறுத்தப்பட்டது.

13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது, அதற்கு அப்பால் சென்று அதிகாரங்களைப் பகிர்வது ஆகிய இரண்டு விடயங்களுக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி முக்கியத்துவம் கொடுத்து வலியுறுத்தியிருக்கிறார். அதுவும் விரைவாக இதற்கான பணிகளை முன்னெடுக்குமாறும் அவர் கூறியிருக்கிறார்.

நரேந்திர மோடியுடனான சந்திப்பின் போது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் 13வது திருத்தச் சட்டம் குறித்தும் மீனவர் பிரச்சினை குறித்தும் கேள்விகள் எழுப்பப்படலாம் என்று முன்கூட்டியே எதிர்பார்க்கப்பட்டது தான்.

அதையும் தாண்டி நரேந்திர மோடி முதல் சந்திப்பிலேயே, 13வது திருத்தச்சட்டம் குறித்து கூடுதலாக வலியுறுத்தியுள்ளதாக தெரிகிறது. அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் 13வது திருத்தச்சட்டம் என்ற பேச்சைக் கையில் எடுப்பதையே விரும்பவில்லை.

ஏனென்றால், 13வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதானால், மாகாணங் களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டிய நிலை வந்துவிடும் என்று கருதுகிறது. அதற்காக 13வது திருத்தச்சட்டம் என்பது ஏதோ அதிகாரங்களை அள்ளிக் கொடுக்கும் அட்சய பாத்திரம் என்று கருதுவதற்கில்லை.

அது ஓர் ஓட்டைப் பாத்திரம் தான் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டிருந்தார். அவ்வாறான ஓட்டைப் பாத்தரத்தை ஒரு கையால் கொடுத்து மறு கையால் பறிக்கும் 13வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்குக் கூட அரசாங்கம் தயாராக இல்லை.

மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு விட்டால் அவை தனிநாடுகளாக உருவெடுத்து விடும் என்ற பிரமை ஒன்று தெற்கிலுள்ள சிங்கள மக்கள் மத்தியில் உருவாக் கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் 13வது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தி, அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தால் சிங்கள மக்களின் கோபத்துக்கு இரையாக நேரிடும் என்ற பயமும் அரசாங்கத்திற்கு உள்ளது.

இந்த அரசாங்கம் தெற்கிலுள்ள சிங்கள பௌத்த தேசியவாதிகளின் ஆதரவையே அதிகம் நம்பியுள்ளது. குறிப்பிட்ட சில முற்போக்கு சக்திகள் அரசாங்கத்துடன் இணைந்திருந்தாலும் சிங்கள, பௌத்த அடிப்படைவாதிகள் தான் அரசாங்கத்திற்கு பலமாக இருந்து வந்திருக்கின்றனர்.

ஆனால், அந்த அடிப்படைவாதிகளினது ஆதரவைக் கூட இப்போது அரசாங்கம் இழக்கத் தொடங்கியுள்ள நிலையில் தான், நரேந்திர மோடியின் அரசாங்கம் இந்தியாவில் பதவிக்கு வந்து ள்ளது.

நரேந்திர மோடி பதவிக்கு வந்தவுடனேயே, 13வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான அழுத்தங்களைக் கொடுக்கத் தொடங்கியிருப்பது அரசாங்கத்திற்கு சிக்கலையே ஏற்படுத்தப் போகிறது.

ஏனென்றால், அரசாங்கக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் ஒரு பகுதி 13வது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவா னவை. இன்னொரு பகுதி எதிர்ப்பானவை.

ஏற்கனவே, அமைச்சர்கள் ராஜித சேனாரத்ன, வாசுதேவ நாணய க்கார, திஸ்ஸ விதாரண, டியூ குணசேகர, நவீன் திஸாநாயக்க உள்ளிட்ட பலரும், 13வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்படி அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால், விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க, தினேஸ் குணவர்தன போன்ற கடும்போக்கு அமைச்சர்கள் 13வது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்று கோரி வருகின்றனர்.

இந்தநிலையில் நரேந்திர மோடி 13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்த ஆரம்பித்துள்ளது, அரசாங்கத்தை முடிவெடுக்க முடியாத குழப்பம் ஒன்றுக்குள் தள்ளிவிடக்கூடும்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மட்டுமன்றி, அதற்கு வெளியே உள்ள சிங்கள, பௌத்த கடும்போக்கு அமைப்புகள் பலவுங்கூட 13வது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்றே வலியுறுத்துகின்றன.

இந்த அமைப்புகளுக்கெல்லாம், நரேந்திர மோடியின் வலியுறுத் தலால் உதறல் எடுக்க ஆரம்பித் துள்ளது. ஏனென்றால் அரசாங்கத் துக்கு அழுத்தங்களைக் கொடுத்து 13வது திருத்தச்சட்டத்தை இந்தியா நடைமுறைப்படுத்தச் செய்து விடுமோ என்ற கலக்கம் அவர்களுக்கு உருவெடுத்துள்ளது.

மன்மோகன்சிங் மெதுவாக காலை வைத்தார், நரேந்திர மோடி வேகமாக காலை வைத்துள்ளார் என்று



எச்சரித்துள்ள தேசப் பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச்செயலர் வசந்த பண்டார, உடனடியாக 13வது திருத்தச் சட்டத்துக்கு சாவுமணி அடிக்கப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

அரசியலமைப்பு மாற்றம் ஒன்றின் ஊடாக 13வது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்ற அழுத்தங்களும் குரல்களும் இனித் தெற்கில் தீவிரமடையக் கூடும். ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அரசாங்கமும் கூட 13வது திருத்தச்சட்டம் ஒழிக்கப்படுவதையே விரும்புகிறது.

ஆனால் அது இந்தியாவின் பகையை தேடித் தந்துவிடும் என்பதால் தான் 13வது திருத்தச்சட்டத்தின் மீது கை வைக்காமல் அதேவேளை, அந்த திருத்தச்சட்டத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு பகிரப்பட்டுள்ள அதிகாரங்களையும் வழங்காமல் அரசாங்கம் இழுத்தடித்து வருகிறது.

இதுவரை இந்தியாவில் வலுவான ஓர் அரசாங்கம் இல்லாததால், இலங்கை அரசாங்கத்தின் இந்த இழுத்தடிப்பு உத்தியை அது கண்டு கொள்ளவில்லை. ஆனால், நரேந்திர மோடி அரசாங்கம் வலுவான அரசாங்கமாக உருவாகியுள்ளதாலும், வலிமையான இந்தியாவை உருவாக்கும் கொள்கையைக் கொண்டதாக இருப்பதாலும், இந்தியாவினது கருத்து உதாசீனம் செய்யப்படுவதை தமக்கான சவாலாகவே கருதும்.

அதாவது, இந்தியாவுக்கு சவால் விடும் வகையில், இலங்கை செயற்படுவதாக இந்திய அரசாங்கம் உணர்ந்து கொண்டால், அது இலங்கை அரசாங்கத்துக்கு ஆபத்தாக முடியும்.

ஏற்கனவே மன்மோகன்சிங் அரசாங்கம் நிலையான அரசியல் தீர்வு மற்றும் 13வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வலியுறுத்திய போது தான், அந்த சவாலைச் சமாளிப்பதற்கு, அரசாங்கம் தெரிவுக்குழுவைக் கையில் எடுத்தது.

தெரிவுக்குழுவில் வைத்து 13வது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிப்பதே அரசாங்கத்தின் இலக்காக இருந்தது. ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பும், ஜேவிபியும் அதில் இணைந்துகொள்ள மறுத்துவிட, ஐதேகவும் அதையே காரணமாகக் கூறி, தெரிவுக்குழுவில் இணைந்து கொள்ளவில்லை.

இதனால், சட்டரீதியாக 13வது திருத்தச்சட்டத்தை செயலிழக்க வைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியில் முடிந்தது.

இப்போதும் கூட, அரசியல் தீர்வு என்ற பெயரில் தெரிவுக்குழுவுக்குள் கூட்டமைப்பை இழுத்து வந்து 13வது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிப்பதற்கே அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

எதிர்க்கட்சிகள் தான் அதற்குப் பிடி கொடுக்காமல் நழுவிக் கொண்டிருக்கின்றன. இந்தநிலையில், நரேந்திர மோடி அரசாங்கம் 13வது திருத்தச்சட்டத்தை நடைமுறைப் படுத்த வலியுறுத்தியுள்ளதும், அதனை நடைமுறைப்படுத்த தாம் முழு ஆதரவு அளிப்போம் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐதேக அறிவித்துள்ளதும், அரசாங்கத்திற்கு நெருக்கடியைக் கொடுக்கப் போகிறது.

ஏனென்றால், பிரதான எதிர்க்கட்சியே ஆதரவளிக்கும் போது, அரசாங்கம் அதனைச் செயற்படுத்தலாம் என்று இந்தியா கூற முனையும். ஆனால் சிங்களத் தேசியவாதிகளினது விருப்பம் அதற்கு எதிர்மாறானதாக இருப்பதால், யாருடைய விருப்பத்தை நிறைவேற்றுவது என்ற சிக்கல் அரசாங்கத்துக்கு ஏற்படும்.

போர் முடிந்து விட்ட நிலையில், போரை வைத்தோ, அதில் பெற்ற வெற்றியை வைத்தோ, புலிகளை வைத்தோ அரசியல் நடத்த முடியாது. அந்த நிலை மாறிவிட்டது.

எனவே, புதியதொரு விவகாரத்தை முன்னிலைப்படுத்தி அரசியல் நடத்தினால் தான் பிழைத்துக் கொள்ளலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இப்படியான நிலையில் அரசாங்கத்திற்குள் இருக்கும் கடும்போக்கு சக்திகள் அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பை வெளியிடத் தொடங் கிவிட்டன.

அவர்களுக்கு நரேந்திர மோடியின் அழுத்தம் . புதிய உற்சாகத்தைக் கொடுக்கும். 13வது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க வலியுறுத்தி அவர்கள் போராட்டத்தை தொடங்கலாம்.

அத்தகையதொரு நிலை உருவானால், அரசாங்கம், தான் யார் பக்கம் என்பதை வெளிப்படுத்த வேண்டியிருக்கும்: ஏனென்றால், 13வது திருத்தச்சட்டத்திற்கு தான் ஆதரவு என்றோ அரசாங்கம் இதுவரை கூறவில்லை.

ஆனால், அதை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது என்பதில் உறுதியாக இருக்கிறது. முன்னர், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். எம். கிருஸ்ணா ஆகியோரிடம் மட்டுமன்றி, இப்போதைய இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜிடம் கூட 13வது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதாகவும், அதற்கு அப்பால் செல்வதாகவும் வாக்குறுதியளித்திருந்தார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. ஆனால் பின்னர் அவ்வாறு எந்த வாக்குறுதியும் கொடுக்கப்படவில்லை என்று அரசாங்கம் நிராகரித்திருந்தது.

இந்தநிலையில், இப்போது கூட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கொடுத்த அழுத்தம் குறித்து அரசாங்கம் வாய்திறக்கவில்லை.

இதிலிருந்து அரசாங்கம் 13வது திருத்தச்சட்ட விவகாரத்தில் இன்னமும் இந்தியாவுடன் விளையாடலாம் என்றே நினைக்கிறது போலும்.

ஆனால், நரேந்திர மோடி அரசாங்கம் அதற்கு இடம்கொடுக்காது என்றே கருதப்படுகிறது. இந்தநிலையில் 13வது திருத்தச்சட்டம் என்பது வரும் நாட்களில் தீவிரமான சர்ச்சையாக இலங்கை அரசியலில் உருவெடுக்கும் வாய்ப்புகள் தோன்றியுள்ளன.

13வது திருத்தச்சட்டம் மாகாணசபைகளுக்கோ, தமிழருக்கோ முழுமையான அதிகாரங்களை அளிக்கக் கூடியதொன்றாக இல்லாவிட்டாலும், இதன் மூலம் உருவாக்கக் கூடிய கலகம், ஒருவேளை தமிழருக்கு கொஞ்சமேனும் நன்மையளிப்பதாக அமையக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழீழத்தை உருவாக்க

எனவும் அதனை செய்ய இந்தியா தலையிட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தார்.

இது தொடர்பாக கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸ்ஸாமில் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்த ஜெயலலிதா ஜெயராம் 25 யோசனைகள் அடங்கிய மகஜர் ஒன்றை பிரதமரிடம் கையளித்தார்.

இந்த யோசனைகளில் சில யோசனைகள் நேரடியாக இலங்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவை.

இலங்கை மற்றும் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களை கொண்டு இலங்கையில் தமிழீழத்தை உருவாக்க பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலையுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக ஐ.நாவின் யோசனை ஒன்றை கொண்டு வருதல், கச்சதீவை திரும்பபெற வேண்டும்.

இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமை பாதுகாக்க வேண்டும் போன்ற யோசனைகள் அதில் அடங்குவதுடன் அவை நேரடியாக இலங்கையை பாதிக்கக் கூடியவை.

நாங்கள் இந்த சகல யோசனைகளையும் வன்மையாக கண்டிக்கின்றோம்.

நல்லிணக்கம், சகவாழ்வு போன்றவை குறித்து தொடர்ந்தும் எம்மை வலியுறுத்தி வரும் ஜெயலலிதா போன்ற இந்திய அரசியல்வாதிகள் மேற்கொள்ளும் இவ்வாறான நடவடிக்கைகளினால் என்ன நடக்கும்?.

இலங்கையில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் இடையிலான நல்லிணக்கம் மட்டுமல்லாது சகவாழ்வுக்கு இருக்கும் வாய்ப்பும் இதன் மூலம் இல்லாமல் போகும்.

நல்லிணக்கத்திற்கு தடையேற்படும் வகையில் நடந்து கொள்வது ஜெயலலிதாவா? நாங்களா?.

ஜெயலலிதா, வெளிநாடுகளில் வாழும் தமிழர்களை இணைத்து கொண்டு ஈழத்தை உருவாக்க வேண்டும் என்றால் அதற்கு பொருந்தமான இடம் தமிழ் நாடு.

தமிழ் நாட்டில் பெரும்பான்மையான மக்கள் தமிழர்கள். இலங்கையில் தமிழீழத்தை உருவாக்க தலையிடுமாறு ஜெயலலிதா இந்திய பிரதமரிடம் கோரிக்கை விடுக்காது தமிழ் நாட்டில் ஈழத்தை அமைக்க அனுமதி கோரியிருக்க வேண்டும்.

இலங்கையில் இருப்பது இதற்கு முற்றும் முழுதான வேறு நிலைமை. இலங்கையில் வாழும் தமிழர்கள் நாடு முழுவதும் பரந்து வாழ்கின்றனர்.

வடக்கில் 45 வீதமான தமிழ் மக்களே வசித்து வருகின்றனர். ஏனைய தமிழர்கள் நாட்டின் பல பிரதேசங்களில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுடன் நல்லிணக்கத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

இதனால் ஜெயலலிதாவின் பாரதூரமான கோரிக்கையின் நோக்கம் என்ன என்பது தெளிவாகியுள்ளது.

இவ்வாறான கோரிக்கைகள் மூலம் 83 கறுப்பு ஜூலை போன்ற கவலைக்குரிய நிலைமையை மீண்டும் இலங்கையில் உருவாக்குவதே அவர்களின் நோக்கம் எனவும் முஸ்ஸாமில் குறிப்பிட்டுள்ளார்.

## அரசியலைத்

ஜனவரி மாதத்தில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலை நடாத்துவதற்கு உசிதமான திகதிகள் குறித்து சில முக்கியமான ஜோதிடர்கள் ஆலோசனை வழங்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த திகதிகளில் பொருத்தமான திகதியை ஜனாதிபதி மஹிந்த தீர்மானிப்பார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பதவிப் பிரமாணம் செய்து கொண்டு நான்கு ஆண்டுகளின் பின்னர் தேர்தலை நடாத்த அரசியல் சாசனத்தில் சந்தர்ப்பம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 19ம் திகதியுடன் நான்கு ஆண்டுகள் பூர்த்தியாவதாகத் தெரிவித்துள்ளார்.

## இன்னும் 132

கைதுசெய்யப்பட்டிருந்ததாக புனவர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ஜெகத் விஜேதிலக்க குறிப்பிட்டுள்ளார்.
அவர்களில் தற்போது 132 பேர் தற்போது வவுனியா முகாம்களில் புனர்வாழ்வளிக்கப்பட வேண்டியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
மூன்று மாதங்களுக்கு ஒருமுறை புனர்வாழ்வளிக்கப்பட்ட குழுவினர் சமூகத்தில் இணைக்கப்பட்டதாகவும், அடுத்த குழு ஜீன் மாதம் விடுவிக்கப்படலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.
மேலும் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்ட, 230 பேர் உயர் கல்வியைத் தொடர தகுதி பெற்றுள்ளதாகவும், பல்கலைக்கழகங்களில் 35 பேர் உயர்கல்வியை தொடர்ந்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## குடும்ப ஆட்சியின்

ருவரின் மரணத்துக்கு பின்னர் அல்லது ஜனாதிபதி பதவியில் நீடிக்க உடல் நிலை ஒத்துழைக்காத பட்சத்தில், நாட்டின் பிரதமர் இடைக்கால ஜனாதிபதியாக நியமிக்கப்படுவார்.

இடைக்கால ஜனாதிபதி, ஒரு மாதத்தின் பின்னர் தமது பதவியை ராஜினாமா செய்வதுடன், அரசாங்க கட்சியில் இருந்து ஒருவரை ஜனாதிபதியாக தெரிவு செய்வார்.

இந்த நடைமுறையில் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் மரணத்துக்கு பின்னர் ஜனநாயக ரீதியாக இடம்பெற்றது. ஆனால் தற்போது நடைபெறுவது ராஜபக்சவின் ஆட்சி.

இங்கு ஜனநாயக வழிக்கு இடமில்லை. மகிந்த ராஜபக்ச தமது பதவி, தமது குடும்ப உறுப்பினர் ஒருவருக்கே செல்ல வேண்டும் என்பதையே விரும்புவார்.

எனினும் நாட்டின் பிரதமராக வேறொருவர் இருக்கும் பட்சத்தில், தமது குடும்ப உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார் என்பது சந்தேகமானது.
இந்த நிலையில் தமது சகோதரரான கோத்தபாய ராஜபக்சவை பிரதமராக நியமித்துவிட்டால், ஏதேனும் அசம்பாவிதம் இடம்பெறும் பட்சத்தில், கோத்தபாய இடைக்கால ஜனாதிபதியாக பதவி ஏற்பார்.

பின்னர் மகிந்தவின் புதல்வர் நாமல் ராஜபக்சவை ஜனாதிபதியாக தெரிவு செய்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே தமக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணைகள் எவையும் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படாத வகையில், தமது மூத்த சகோதரர் சமல் ராஜபக்சவை சபாநாயகராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உறவுகளுக்கான

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செ.கஜேந்திரன், வடமாகாண உறுப்பினர்களான அனந்தி சசிதரன், எம்.கே.சிவாஜிலிங்கம், து.ரவிகரன், அன்ரனி ஜெகநாதன், மேரி கமலா குணசீலன, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

புலனாய்வாளர்கள், பொலிஸாரின் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் காணாமல்போரின் உறவுகள் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு முன்பாகத் திரண்டு தமது உறவுகளை மீட்டுத் தருமாறு கண்ணீர் மல்கக் கோரிக்கை விடுத்தனர்.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்வதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்த வந்தவர்கள் முள்ளிவளை மற்றும் கேப்பாபிலவுப் பகுதிகளில் இடைமறிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதையும் மீறி மாவட்டச் செயலகதை வந்தடைந்தவர்களையும் பஸ்ஸிலிருந்து இறங்கவிடாது சிலர் தடுத்ததுடன் கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு எதிராகக் கோசங்களையும் எழுப்பியுள்ளனர்.

எனினும் இவ்வாறான எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் காணாமல் போனோரின் உறவுகள் தமது கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

## இலங்கையில்

இனப்படுகொலை என்ற சொல் பிழையான அர்த்தத்தை கொடுக்கும் சொல்லாகும் என்று குறிப்பிட்டார்.

ஜெயலலிதா எதனைக் கூறினாலும் இந்திய பிரதமர் மோடி சரியான நிலைப்பாட்டை எடுப்பார் என்று கெஹலிய செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## வடபகுதியில் தற்போது

கொண்டுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவிக்கின்றார்.

இராணுவத்தில் 2700 அத்தியாவசிய வெற்றிடங்கள் நிலவி வருகின்ற நிலையில், அதற்கு வட,கிழக்கைச் சேர்ந்த சுமார் 1100 இளைஞர், யுவதிகளை இணைத்துக் கொண்டுள்ளதாகவும் தெரிவித் தார்.
தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், நாடளாவிய ரீதியில் 20,000 வெற்றிடங்கள் நிலவி வருகின்ற நிலையில் 2700 அத்தியாவசிய வெற்றிடங்களை இனங்கண்டுள்ளோம். இதற்கு முல்லைத்தீவில் 131 பேர், கிழக்கில் 410 பேர், கிளிநொச்சியில் 125 பேர், வவுனியாவில் 45 பேர், யாழ்ப்பாணத்தில் 400 பேர் உள்ளடங்கலாக 1111 இளைஞர், யுவதிகளை இராணுவத்தில் இணைத்துள்ளோம்.

இதனை போல 18,000 ஏக்கர் காணிகளையும் விடுவித்துள்ளோம். 2009 இல் 4379 ஏக்கர், 2010 இல் 6452 ஏக்கர், 2011 இல் 5817 ஏக்கர், 2012 இல் 785 ஏக்கர், 2013 இல் 410 ஏக்கர், 2014 இதுவரை 201 ஏக்கர் என்ற அடிப்படையிலே 18,000 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. அத்துடன் சுமார் 400 தொடக்கம் 500 இராணுவ முகாம்களும் இப்பகுதியிலிருந்து அகற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## நாட்டுப்பற்றை

விடப்பட்டன. பாகுபாட்டுடன் நடத்தப்பட்டார்கள். நடைமுறை வாழ்க்கையிலிருந்து அவர்கள் ஒதுக்கப்பட்டார்கள். இதனாலேயே தாயகத்திலிருந்து பெருமளவு தமிழர்கள் மனம் வெதும்பி வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தார்கள்.

இந்நிலையில் நாட்டில் இயல்பு நிலை தோற்றுவிக்கப்பட்டிருக்கும் நிலையில் புலம்பெயர்ந்த தமிழர்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய சிலர் இன்று இங்கே வந்து பாதிக்கப்பட்ட தங்கள் உறவுகளுக்காக உதவியாற்றுவது அவர்களின் தாய் நாட்டுப்பற்றை எடுத்துக் காட்டுவதாக வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.தொல்புரம் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையம் திறப்பு விழா நேற்றைய தினம் நடைபெற்றிருந்தது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இன்று இப்பிரதேசத்திற்கு ஒரு நன்நாள். கொடையின் சிறப்பையுணர்த்துஞ் சிறந்த நாள். யாழ் மாவட்டத்தில் பதினான்கு ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. தொல்புரம் கிராமத்தில் 1957ம் ஆண்டு அம்பலவாணர் தையல்பாகர் என்ற இக்கிராமத்தைச் சேர்ந்த கொடையாளி ஒருவரால் இங்குள்ள மருத்துவ நிலையம் ஆரம்பிக்கப்பட்டு சுகாதாரத் திணைக்களத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.

நீண்ட காலமாக இவ் வைத்தியசாலை அன்பளிப்புச் செய்யப்பட்ட பழைய கட்டிடத்திலேயே இயங்கி வந்தது. அப்போது தான் இதைக்கண்ணுற்ற அப் பெரியவரின் பேரனும் தற்போது இங்கிலாந்தில் பொறியியலாளராகப் பணியாற்றி வருபவருமான இங்கு வருகை தந்திருக்கும் இராஜபட்சம் ஸ்ரீ ரங்கபட்சம் அவர்கள் இவ்வைத்தியசாலைக்கு இப் புதிய கட்டிடத்தை நிர்மாணித்து சுகாதார திணைக்களத்திற்குக் கையளித்துள்ளார்.

ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையம் என்பது இலங்கையிலுள்ள வைத்தியசாலைக் கட்டமைப்பிலுள்ள ஆரம்ப நிலைக் கட்டமைப்பாகும். இங்கு 2 வெளிநோயாளர் பிரிவும் சிகிச்சை நிலையங்களும் இடம்பெறுவன. அவ்வாறான ஒரு ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு நிலையத் திறப்பு விழாவே இன்று விமர்சையாக நடந்தேறியது. இன்று எமது புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் தாம் பிறந்த, தமது முன்னோர் பிறந்த தமிழ் மண்ணை மறவாது உதவ முன்வந்துள்ளமை பாராட்டத்தக்க ஒரு விடயம்.

எனவே எமது மக்களுக்கு இங்கு நடப்பதைத் தான் நான் கூறி வைக்கின்றேன். இந்த இனிமையான நன்நாளை துயரப் படிவு கொண்ட நாளாக மாற்றுவது எனது நோக்கமல்ல. எமது மக்களின் ஒற்றுமைப்பாடும் ஒருமித்த சிந்தனையும் கூட்டுறவும் ஒத்துழைப்புமே எமக்கு வருங்காலத்தில் வளம் கொடுக்கும் வாழ்வைத் தருவன. இந்தக் கூட்டுறவுக்கு அடிகோலும் விதத திலேயே இராஜபட்சம் ஸ்ரீரங்கபட்சம் அவர்கள் நடந்து கொண்டிருக்கின்றார். அவருக்கு எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

அவரைப் போல சுற்றுச் சூழலை, பிரதேசத்தை, கட்டமைப்புக்களைக் கட்டித் தந்து உதவ பலர் முன்வரவேண்டும். அவர் தந்த இந்தக் கொடை எம்மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தட்டும் எனத்தெரிவித்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய மண்ணை எடுத்து மைதானம் அமைக்கும் அவுஸ்திரேலியா கனவு பலிக்குமா?




இந்திய மண்ணில் சாதிப்பதற்கு அவுஸ்திரேலிய அணி புதுத்திட்டம் தீட்டியுள்ளது.
அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி கடந்த ஆண்டு இந்தியாவில் நடந்த 4 டெஸ்டிலும் படுதோல்வி அடைந்தது.

சில மாதங்களுக்கு முன்பு ஆசஸ் கிண்ணத்தை வென்று டெஸ்ட் தரவரிசையில் நம்பர் ஒன் இடத்தை பிடித்த அவுஸ்திரேலியா அந்த இடத்தை தொடர்ந்து தக்க வைக்க வெளிநாட்டு போட்டிகளில் தொடர்ந்து வெற்றி பெற்றாக வேண்டும் என்ற எண்ணத்தில் உள்ளது.

இதனால், ஆசிய மண்ணில் சாதிப்பதற்கு புதிய வழிமுறையை நாடியுள்ளது. இதன்படி இந்தியாவில் இருந்து மண்ணை இறக்குமதி செய்து பிரிஸ்பேனில் உள்ள தேசிய கிரிக்கெட் அகாடமியில் ஆசிய மைதானங்களில் இருப்பது போன்று பயிற்சி ஆடுகளங்களை (பிட்ச்) அமைக்க முடிவு செய்துள்ளது.

இதன் மூலம் தங்களது பலவீனங்களில் ஒன்றான சுழற்பந்து வீச்சில் முன்னேற்றம் காண முடியும் என்று அவுஸ்திரேலியா அணி நம்பி வருகிறது.

## பிரையன் லாராவை ரசிப்பேன்! மனம் திறந்தார் சச்சின்

கிரிக்கெட் சூதாட்ட விசாரணைகள் முக்கியமானவை என்று இந்திய நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார்.
சிங்கப்பூருக்குப் பயணம் மேற் கொண்டுல்ல சச்சின் அங்கு ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

அப்போது பேசிய அவர், அக்கறையுள்ளவர்கள் சில முக்கியமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். ஏனெனில் இது கிரிக்கெட் ஆட்டத்தின் நேர்மையைக் காப்பதற்கு அவசியம், நியாயமான போட்டியைப் பார்ப்பதற்கு ரசிகர்களுக்கு உரிமை இருக்கிறது என்று கூறியுள்ளார்.

மேலும் மேற்கிந்திய வீரர் லாராவுடன் சேர்ந்து விளையாடுவது குறித்து அவர் கூறுகையில், நாங்கள் ஒரே அணிக்கு ஆடியுள்ளோம், இருவரும் ஜோடி சேர்ந்து சிறப்பாக ஆடியுள்ளோம், இந்த முறையும் ஜோடி சேர்ந்து ஓட்டங்கள் சேர்ப்போம் என்று நம்புகிறேன்.

அவருக்கு எதிராக விளையாடுவதை மகிழ்ச்சியுடன் அணுகியுள்ளேன், பிரையன் லாரா மற்ற நாடுகளுக்கு எதிராக ஓட்டங்கள் எடுப்பதை மகிழ்வுடன் ரசித்துப் பார்ப்பேன், ஆனால் இந்தியாவுக்கு எதிராக அவர் ஆடும்போது அல்ல என்று கூறியுள்ளார்.


### சகல விதமான பதிப்பக வேலைகளுக்கும்

மன்னாரில் சகலவிதமான பதிப்பக வேலைகளும் ஒரேஇடத்தில் குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

### நித்திலம் பதிப்பகத்திற்கு

- பனர் (Banner) தரம் 1-சதுர அடி - 70/=
- ஸ்ரிக்கர் (Sticker) தரம் 1-சதுரஅடி -120/=
- இறபர்ஸ்ராம் - 300/= இலிருந்து 10நிமிடத்தில் தர உத்தரவாதத்துடன்

முகவர்களிற்கும் ஐயாயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட சேவை பெறுனருக்கும் விசேடவிலைக்கழிவு வழங்கப்படும்

* விசிட்டிங்காட்
* பில் புத்தகங்கள்
* லேபல்கள்
* நினைவு மலர்கள்
* பருவகால மலர்கள்
* சஞ்சிகைகள்
* விசிட்டிங்காட்
* பில் புத்தகங்கள்
* லேபல்கள்
* நினைவு மலர்கள்
* பருவகால மலர்கள்
* சஞ்சிகைகள்
* போஸ்ரர்கள்
* பரிட்சை வினாத்தாள்கள்
* விளம்பரப் பலகைகள்
* கடிதத் தலைப்புக்கள்
* சான்றிதழ்கள்
* கலர் பிறிண்ட்
* நிழல் பிரதி -03/=

- 4கலர் வேலைகள்குறைந்த கட்டணத்தில்

*இவை அனைத்தும் மன்னாரிலே தயாரிக்கப்படுகின்றன ஏனையமாவட்டங்களை நம்பியிருக்க வேண்டிய அவசியமில்லை அதிக கட்டணத்தை வழங்கி ஏமாறாதீர்கள் மன்னாரில் பல போலி முகவர்கள் உள்ளதால் குறைந்த கட்டணம் உள்ளஇடத்தை தெரிவு செய்யுங்கள் அரச ,அரசசார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் பாடசாலைகள், தன்னார்வ சமூக சேவையாளர்கள், ஆகியோருக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும் மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் தொலை பேசி இலக்கத்திற்கு நாடுங்கள் நித்திலம் பதிப்பகத்திற்கு*

**பிரதான வீதி , சின்னக்கடை , மன்னார்**
**0232223545 - 077-8355464**


## முதலிடத்தில் விராத் கோஹ்லி



ஒருநாள் போட்டி துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் இந்தியாவின் விராத்கோஹ்லி முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டார்.

சர்வதேச ஒருநாள் போட்டியில் சிறந்து விளங்கும் அணிகளுக்கான தரவரிசை பட்டியலை, சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.,) துபாயில் வெளியிட்டது.

இதில் அணிகளுக்கான தரவரிசையில், இந்திய அணி (112 புள்ளி) 2வது இடத்தில் இருந்து 3வது இடத்துக்கு தள்ளப்பட்டது.

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரை கைப்பற்றிய இலங்கை அணி (112), தசம புள்ளிகள் வித்தியாசத்தில், 2வது இடத்துக்கு முன்னேறியது.

அவுஸ்திரேலிய அணி 115 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.

ஒருநாள் போட்டி துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் இந்தியாவின் விராத் கோஹ்லி முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டார். இந்திய அணித்தலைவர் தோனி 6வது இடத்தில் நீடிக்கிறார்.

மற்றொரு துவக்க வீரர் சிகர் தவான் 8வது இடத்துக்கு தள்ளப்பட்டார். ரோகித் சர்மா 20வது இடத்துக்கு முன்னேறினார். இலங்கை வீரர் தில்சன் 9வது இடத்தில் இருந்து 7வது இடத்துக்கு முன்னேறினார்.

தென் ஆப்ரிக்காவின் டிவிலியர்ஸ், அவுஸ்திரேலியாவின் ஜார்ஜ் பெய்லி முறையே 2, 3வது இடங்களில் உள்ளனர்.

## மெஸ்ஸியின் மார்க்கெட் மதிப்பு 294 மில்லியன் டொலர



உலகின் விலையுயர்ந்த வீரராக முன்கள வீரராக மெஸ்ஸி திகழ்கிறார். சுவிட்சர்லாந்தை சேர்ந்த சி.ஐ.இ.எஸ். கால்பந்து கண்காணிப்பு அமைப்பு சமீபத்தில் வெளியிட்ட ஆய்வில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான்கு முறை உலகின் சிறந்த கால்பந்து வீரர் விருதை வென்ற மெஸ்ஸியின் மார்க்கெட் மதிப்பு 294 மில்லியன் டொலர். உலகின் சிறந்த வீரர் விருதை வென்ற ரியல் மாட்ரிட் அணியின் ரொனால்டோவின் மார்க்கெட் மதிப்பு 114 மில்லியன் யூரோ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரொனால்டோ(29), மெஸ்ஸி(27) இருவருக்கும் இடையிலான் மார்க்கெட் மதிப்பு வித்தியாசத்துக்கு அவர்களது வயது வித்தியாசமே காரணம் என ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இங்கிலாந்து அணியில் புதுமுகங்கள்




இங்கிலாந்து டெஸ்ட் அணியில் 3 புதுமுகங்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.
இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டிக்கு இங்கிலாந்து அணி 12 வீரர்கள் கொண்ட அணியை அறிவித்துள்ளது.

இதில் மொயீன் முனிர் அலி, சாம் ராப்சன், கிறிஸ் ஜோர்டான் என்ற 3 புதுமுக வீரர்கள் சேர்க்கப் பட்டுள்ளனர்.

மேலும் மேட் பிரையர், லியாம் பிளங்கெட், கிறிஸ் வோக்ஸ் ஆகியோர் மீண்டும் அணியில் அழைக்கப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்து அணி வருமாறு:

குக், ஆண்டர்சன், மொயீன் அலி, கேரி ப்ாலன்ஸ், இயன் பெல், ஸ்டூவர்ட் பிராட், கிறிஸ் ஜோர்டான், லியாம் பிளங்கெட், மேட் பிரையர், சாம் ராப்சன், ஜோ ரூட், கிறிஸ் வோக்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை #87 பிரதான வீதி, மன்னாரில் அமைந்துள்ள நித்திலம் வெளியீட்டகத்தால் 06.06.2014 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.